
# சித்திரா

நாட
826

1229 — 183



1229 — 183

மஹா கவி இரவீந்திரநாதரின்

# சித்திரா

(ஒரு நாடகம்)

375

தமிழ் மொழிபெயர்ப்பு
(நாடக விமர்சனையுடன்)

K. S. அப்பாஸ்வாமி ஐயர்
இயற்றியது

12.10.60

CHANDRA PUBLISHING HOUSE
MYLAPORE : : MADRAS.

காபிரைட்] 1948 [விலை 1-8-0

PALANI PRACHURAM
PUBLISHERS & BOOK-SELLERS

முதற்பதிப்பு

சமர்ப்பணம்

எனது வாழ்க்கைத் துணைவி

தர்மபத்தினி

ஜானகி அம்மாளுக்கு

சமர்ப்பித்தது

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 164
நன்கொடை எண்: 164

மதுரை காமராசர் பல்கலைக்கழக
நூலகம்

# ACKNOWLEDGMENTS

TAMIL VERSION OF

RABINDRANATH TAGORE'S CHITRA

It has been my desire for long to spread the knowledge of the great literary works of Rabindranath Tagore, the greatest poet of Modern India.

I am grateful to Messrs Macmillan and Co., the publishers of the poet's works in English, as well as to the Poet's Trustees for the kind permission accorded to me to produce and publish Tamil versions of certain of the poet's dramas. This book is the first of my productions in this regard.

I had the good fortune to have some little personal acquaintance with the Poet. In his letter dated January 25, 1940, he wrote to me, "I am grateful to know that you are spending so much of your time in popularising my writings and thoughts in your part of the world and I would ask you to accept my sincere thanks."

Mylapore (Madras)
November 1948.

K. S. APPASWAMI AYYAR,
*Retd. Dist. Educational Officer.*

# பிழைத் திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| vii | 20 | ஏரிகறை | ஏரிகரை |
| 2 | 3 | இருக்கிறுன் | இருக்கிறுர் |
| 3 | 20 | ஒப்பிவித்த | ஒப்புவித்து |
| 13, 74 | 7 | சித்தரித்து | சித்திரித்து |
| 14 | 15 | என்றும் | என்பதும் |
| 1 | 13 | எல்லைப்புரம் | எல்லைப்புறம் |
| 20 | 8 | இளை | இலை |
| 22 | 21 | சாகு | சருகு |
| ,, | 24 | உத்திரவு | உத்தரவு |
| 26 | 5 | சுறுக்கென | சுருக்கென |
| 29, 61 | 8, 15 | பழய | பழைய |
| 29 | 10 | ஸ்திரீயிள் | ஸ்திரீயின் |
| 29 | 20 | பரித்தது | பறித்தது |
| 35 | 15 | சந்திரன் | சூரியன் |
| 35 | 15 | இருள் | மூடுபனி |
| 52 | 10 | கூச்சல் | கூவுதல் |
| 66, 69, 82, | 15, 23, 21, 16 | உரை | உறை |
| 71 | 3 | துனைவி | துணைவி |

71, 72, 74, 79, 80 (சில இடங்களில்) அருச்சனன் அருச்சுனன்

## முகவுரை

மஹாகவி இரவீந்திரநாதர் இயற்றிய சித்திரா என்ற நாடகம் ஓர் அற்புதமான காதல் சித்திரம். இது சிங்கார ரஸத்தோடு, பக்தி ரஸமும் பொருந்திய நாடகம், மேலும், இது காதலைப்பற்றிய தத்துவ ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட அருமையான நாடகம்.

முதல் 3 காட்சிகளிலும் சிங்காரரஸம் நிறைந்து ததும்புகிறது. பின் 6 காட்சிகள் நாடகத்தின் உள்ளர்த்தத்தை வெளிப் படுத்துகின்றன.

இது ஒரு கவிதைபோல நாடகாசிரியரால் இயற்றப் பட்டுள்ளது. நூலின் நடையைச் சிறிதேனும் மாற்றாமலே, அதன் கவிதாரஸம் குறையாதபடியும் படிப்பவருக்குத் தெளிவாய் விளங்கும்படியும், நமது தாய் மொழியில் மொழி பெயர்த்துளேன்.

நாடகம் படிக்கும்போதே எளிதாய் விளங்கும் பொருட்டு, இப்புத்தகத்தின் துவக்கத்தில் கதைச்சுருக்கம், நாடகத்தின் விசேஷங்கள் என்ற இருபகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

நாடகத்தை ஆராய்ச்சி முறையில் ஆழ்ந்து அறிந்து கொள்வதற்குப் பயன்படும்படி, புத்தகத்தின் பின் பாகத்தில், நாடக விமர்சனை என்ற பகுதியில், விளக்கக் குறிப்புக்கள், மூலகதையின் முழு விவரங்கள், நாடகாசிரியரின் அற்புதமான சுய கற்பனைகள், என்பவை சேர்க்கப்பட்டுள்ளன.

இப்புத்தகத்திலடங்கிய மொழிபெயர்ப்பின் முழு உரிமையும் இவ்வாசிரியருக்கே உள்ளது.

இப்புத்தகத்தின் தொடர்ச்சியாக, மஹாகவியின் கீழ்க்கண்ட நாடகங்களின் மொழிபெயர்ப்புக்கள் வெளி வரும். அவைகளைச் சீக்கிரத்தில் எதிர்பார்க்கலாம்.

(1) ராஜாராணி அல்லது நாட்டுக்காகத் துறந்த ராணி'
(2) காளி கோவில் பூஜை
(3) சன்னியாசி
(4) கண்காணு அரசர்

ஆசிரியர்.

அல்லயன்ஸ் பிரஸ், 156, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர், சென்னை - 4

## நாடகத்தில் சேர்க்கத்தகுந்த புதிய காட்சிகள்

(1) சித்திரா வேட்டையாடும் காட்சி :—

சித்திரா ஆடவர்களது உடையை உடுத்திக் கொண்ட பல ஸ்திரீகளுடன் குதிரைகள்மீது ஏறிக்கொண்டு காட்டில் வேட்டையாடும்போது, சித்திரா ஒரு மானைத் தொடர்வதும், அதனுல் தனியாகப் பிரிந்து போவதும், அருச்சுனனைக் காண்பதும், அவர்களிருவரும் சம்பாஷணை செய்வதும்.

(2) சித்திரா அருச்சுனனைக் இரண்டாம் முறை காணும் காட்சி :—

சித்திரா பெண் உடையையும் ஆபரணங்களையும் அணிந்து அருச்சுனனைக் காட்டில் தேடிக் கண்டுபிடிப் பதும், அவர்களிருவருக்கும் நடந்த சம்பாஷணையில் அருச்சுனன் தான் மணக்க இயலாது என்று சொல் வதும்.

(இவ்விரு காட்சிகளைச் சித்திரா வாயால் தேவதைகளுக்கு வர்ணிக்கிருள். இவற்றை மேடைமீது நடித்துக் காண்பிப்பது நலம்.)

(3) மௌனக் காட்சி - சித்திரா தண்ணீரில் தனதுஅழகைக் கண்டு வியக்கும் காட்சி:—

சித்திரா ஏரிகறைக்குப்போய்த் தண்ணீரில் தன் பிம்பத்தைப் பார்த்தல் (மரங்களின் மறைவில் அருச் சுனன் இருக்கிருன்.)

குறிப்பு :—நாடகத்தின் முதல் 3 காட்சிகளுடன் இம் மூன்று புதிய காட்சிகளையும் சேர்த்து, சித்திராவின் மணம் என்ற ஓரங்க நாடகமாக நடித்துக் காண்பிக்கலாம்.

# பொருளடக்கம்


| விஷயம் | பக்கம் |
|---|---|
| நாடகத்திற் சேர்க்கத்தகுந்த புதிய காட்சிகள் | |
| கதைச் சுருக்கம் | 1 |
| நாடகத்தின் விசேஷங்கள் | 10 |
| நாடகாசிரியரது முகவுரை | 17 |
| நாடகம் | 38 |
| நாடக விமர்சனை | 72 |
| மஹாபாரதக் கதையின் முழுவிவரங்கள் | 84 |
| நாடகாசிரியரின் அற்புதக் கற்பனைகள் | 86 |

## 1. சித்திரா

### என்ற நாடகத்தின்

### கதைச்சுருக்கம்

இந்நாடகத்தின் கதாநாயகி சித்திரா என்பவள். அவள் மணிபுர மென்ற நாட்டின் அரசருக்கு ஒரே புதல்வியாகப் பிறந்தவள். அவ்வரசர் தனக்குப்பின் சித்திராவே பட்டத்துக்கு வரவேண்டுமென்று அவளை ஒரு புத்திரன்போலவே பாவித்து அவளுக்கு அக்காலத்து அரசகுமாரர்களுக்குரிய வில்வித்தை, குதிரை யேற்றம் அரசாட்சிமுறை முதலிய பல கலைகளிலும் பயிற்சியளித்தார்.

1. சித்திராவின் பிறப்பும் வளர்ப்பும்

பிதாவின் காலமானதும் சித்திரா பாலியத்திலேயே அரசியாகப் பட்டங் கட்டப்பெற்றுள். அவளது அரசாட்சியைக் குடிகளெல்லோரும் புகழ்ந்தனர். அவளது நிகரற்ற வீரத்தையும் செங்கோன் முறையையும் மெச்சினர். எட்டாவது காட்சியில் அவர்கள் பின்வருமாறு சொல்கின்றனர், "இந்நாட்டில் வாழும் எங்களுக்கு இயற்கையாக நீண்ட ஆயுட்காலத்தின் இறுதியில் வரும் மரணம் ஒன்றைத் தவிர வேறு எவ்விதத் துன்பமும் உண்டாகாதபடி எங்கள் அரசி எங்களைக் காப்பாற்றுகிருள். குடிகளாகிய எங்களுக்கு அன்பு

2. சித்திராவின் அரசாட்சி

மிக்க அன்னையாகவும் ஆற்றல் மிக்க பிதாவாகவும் எங்கள் அரசி இருக்கிருள்.''

சித்திராவின் மனம் அரச காரியங்களிலும் வீரச் செயல்களிலும் முழுவதும் ஈடுபட்டிருந்ததால், ஓர் ஆடவனை மணஞ் செய்துகொள்ளவேண்டுமென்ற எண்ணம் அவளது மனத்தில் உண்டாகவில்லை. அவள் ஆண் உடைகளையே அணிந்துவந்தாள் அவள் குதிரை ஏறி வேட்டையாடுவதுண்டு. அவ்வாறு ஒருநாள் காட்டில் வேட்டையாடும்போது, அங்கே அயல்நாட்டார் ஒருவரைக் கண்டாள். அப் புதியவர், தான் இதுவரை கண்டுள்ள ஆடவர்களைவிடக் கம்பீரமான தோற்றத்தை யுடையவரென்றும், ஒரு மகா வீரரா யிருக்கவேண்டுமென்றும், சித்திராவுக்குப் புலப்பட்டது. அவரை யாரென்று கேட்டு, அவர் குரு வம்சத்திற் பிறந்த புகழ் பெற்ற அருச்சுனர் என்பதாகத் தெரிந்துகொண்டாள். அதுவரையில் எந்த ஆடவரையும் லட்சியம் செய்யாதிருந்த சித்திராவின் மனத்தை, அக்கணம் மன்மத பாணங்கள் துளைக்க ஆரம்பித்தன. அவள் திகைத்துப் போய்ப் பேசமுடியாமல் நின்றுவிடவே, அவள் அறியாமலே அருச்சுனன் அவ்விடம்விட்டுப் போய்விட்டான்.

3. சித்திரா வேட்டையாடும்போது அருச்சுனனைக் கண்டது

சித்திரா தன் அரண்மனையை யடைந்ததும் தனது ஆண் உடைகளைக் களைந்து, பெண்களுக்குரிய அழகிய ஆடையாபரணங்களை அணிந்துகொண்டு, காட்டிற்குட் போய் அருச்சுனனைத் தேடிக் கண்டு பிடித்தாள். ஆசை வெட்கமறியாது என்றபடி அருச்சுனனுக்குத் தன் விருப்பத்தைத் தெரிவித்தாள். ஆனல் அருச்சுனன் அவளை மணப்பதற்குச் சம்மதிக்கவில்லை. ''நான் பிரம்மசரிய விரதத்தைக்

4. அருச்சுனனைத் தேடித் தன் காதலைத் தெரிவித்தது

கைக்கொண்டிருக்கிறபடியால், ஒரு ஸ்திரீயை மணக்க இயலாது” என்று சொல்லிவிட்டான். இவ் விடை சித்திராவின் மனத்துக்குத் திருப்தியளிக்கவில்லை. அருச்சுனன் தன்னை ஏற்றுக்கொள்ளாததற்கு உண்மையான காரணம், தனக்கு ஆடவர் கண்ணைக் கவரும்படியான அழகு இல்லாதது என்று அவள் எண்ணினாள். சித்திரா இவ்வாறு எண்ணினதற்கு நியாயமிருந்தது. ஏனெனில் அவள் இன்னும் பூரணமான யௌவன பருவத்தை அடையவில்லை. யௌவனத்துக்குரிய அவயவ லக்ஷணங்களும் முகலக்ஷணமும் அவளுக்கு இன்னும் உண்டாகவில்லை. சித்திரா எவ்விதத்தாலாயினும் அருச்சுனனை அடையவேண்டுமென்று மனவுறுதி செய்துகொண்டாள். தவத்தால் எதையும் அடையமுடியுமென்பது அவளது நம்பிக்கை. நமது முயற்சியால் ஆகக் கூடாத காரியங்கள் தெய்வபலத்தால் ஆகலாமென்பது அவளுடைய கொள்கை.

**5 சித்திரா தவத்துக்குப் போனது**

சித்திரா ஓராண்டு காலம் தனியாக ஸ்தலயாத்திரை செய்யப்போவதாகக் குடிகளிடம் சொல்லிவிட்டுத் தனது அரசாட்சியைத் தக்க பிரதிநிதிகளிடம் ஒப்புவித்து, நகரைவிட்டு வெளியே போனாள். அவள் எங்கு போனாளென்பது யாருக்கும் தெரியாது.

**6. சித்திரா காட்டில் தவம் புரிந்தது**

காட்டிற்குள் ஜன நடமாட்டமில்லாத மறைவான ஓர் இடத்தில் அவள் மன்மதன் என்ற தேவதையைக் குறித்துக் கடுமையாகத் தவம் புரிந்தாள். சில நாட்களுக்குப் பிறகு, மன்மதனும் அவரது தோழனான வஸந்தனும் அவள் கண்முன் தோன்றினார்கள். அவர்களைப் பார்த்துச் சித்திரா, “தேவதைகளே! அருச்சுனரைப் பதியாக அடைய நான் விரும்பு

கிறேன். எனது பணிகளாலும் அரிய செயல்களாலும் அவரது அன்பை நான் பெறமுடியு மென்றாலும், எனது சுய முயற்சிகளால் பயனடைவதற்கு நீண்டகாலம் பிடிக்கும். ஆனால் நீங்கள் மனதுவைத்துத் திவ்வியமான மேனியழகை ஒரே ஒரு நாளைக்கு அருளுவீர்களேயானால், நான் அருச்சுனரது மனத்தை எளிதிற் கவர்ந்துவிட இயலும். இவ்விதமாக அவருக்கு உண்டான காதலை நான் எனது செயல்களால் நிலை நாட்டிக்கொள்வேன்" என்றாள்.

அவளது வேண்டுகோளுக் கிணங்கி மன்மதனும் வஸந்தனும், "பெண்ணே! ஒரு நாளைக்கு மட்டுமன்று, ஓராண்டு காலத்துக்கு அருச்சுனனது மனத்தைக் கவரும்படியான திவ்விய அழகை உனக்கு அளிக்கிறோம். அதன் மூலமாக நீ உன் கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்ளலாம்" என்பதாக வரமளித்துவிட்டு மறைந்தனர். உடனே அவளது உருவத்தில் மாறுதல் உண்டாயிற்று. அருகிலிருந்த ஏரியின் கரைக்குப்போய் ஒரு பளிங்குக் கல்லின்மேல் ஏறி நின்றுகொண்டு நீரில் தனது பிரதிபிம்பத்தைக் கண்டதும், அவளுக்கே வியப்பு உண்டாயிற்று.

7. சித்திரா திவ்விய சுந்தரியாக ஆனது

இதற்குள்ளாக அருச்சுனன் தான் கைக்கொண்ட பிரம்மசரிய விரதத்திற்கேற்ப, துறவி யுடையைத் தரித்து அவ்வேரி கரையில் ஒரு தனியிடத்தில் வசிக்கலானான். சர்வ லக்ஷணங்களுமுள்ள ஒரு ஸ்திரீ நீரில் தனது உருவத்தைப் பார்த்துவிட்டுப் போனது அவனுக்கு வியப்பை உண்டாக்கிற்று. அந்த ஸ்திரீ தன்னை இதற்கு முன்னரே கண்டு காதலித்த பெண்ணென்பதை அவன் அறியவில்லை. தேவதைகளுடைய அருளினால் சித்திரா புதிய லக்ஷணங்களை

8. அருச்சுனன் துறவறம் பூண்டது

அடைந்ததுதான் அவளை இன்னாரென்று அவன் அறியாததற்குக் காரணம்.

திவ்வியசுந்தரியாக மாறின சித்திரா தனது தவத்தை முடித்துக்கொண்டு, பக்கத்திலிருந்த சிவன் கோவிலை யடைந்து தன் மனோபீஷ்டத்தை நிறை

9. சித்திரா சிவபூஜை செய்தது

வேற்றிக் கொடுக்கவேண்டிச் சிவபெருமானைத் தினம் பூஜை செய்வதற்காக அக் கோவிலின் பிராகாரத்தின் ஓர் அறையில் வசிக்கலானாள். துறவியாயிருந்த அருச்சுனனும் அக்கோவிலுக்குச் சுவாமி தரிசனத்திற்கு வருவதுண்டு.

ஒருநாள் சித்திரா கோவில் அறையிலிருந்து வெளியே வரும்போது, துறவி உடையிலிருந்த அருச்சுனனைக் கண்டாள். அந்தத் துறவிதான் காட்

10. சித்திராவும் அருச்சுனனும் சந்தித்தது

டில் முன்பே கண்டு காதல்கொண்ட அருச்சுனன் என்று அவளுக்குப் புரியவில்லை. உலகத்தை முற்றுந் துறந்த யாரோ ஒரு மகான் என்றே அவள் எண்ணினாள். அவருக்கு உபசாரங்கள் செய்து உணவளிப்பது புண்ணியமான காரியமாகுமென்று எண்ணி அவரை அன்புடன் வரவேற்றாள். அதன்மூலம் அவர்கள் இருவருக்கும் சம்பாஷணை உண்டாயிற்று.

சித்திராவின் அழகைக் கண்டதும் அருச்சுனனுக்கு அவளிடம் காதல் உண்டாயிற்று. ஆனால் அக் காதலை அவன் உடனே தெரிவிக்க

11. அருச்சுனனது வேண்டுகோளுக்குச் சித்திரா இணங்காதது

வில்லை. அவள் யாரென்றும் அவள் எதற்காகச் சிவன் கோவிலில் தனியாக வசிக்கிறாளென்றும் அருச்சுனன் அவளைக் கேட்டான். அவனை ஒரு மகான் என்று சித்திரா எண்ணினதால், அவனிடம் தனது மனத்திலுள்ள விருப்பத்தைத்

தெரிவிக்கலாமென்று எண்ணித் தான் அருச்சுனனை அடையவேண்டுமென்று தவம் புரிவதாகச் சொல்லி விட்டாள். தன்னைக் காதலிப்பதாக அந்த சுந்தரி சொன்ன வார்த்தைகளைக் கேட்டதும், தானே அருச்சுனன் என்பதாகக் கூறித் தன்னை அப்போதே மணவாளனாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்தான். அக்கணமே அருச்சுனனிடம் அவளுக்கிருந்த மதிப்பு குறைந்துவிட்டது. அவள், "அருச்சுனரே! மோகத்தால் உமது புத்தியை இழக்கவேண்டாம். நிலையில்லாத இந்த எனது மேனியழகில் என்ன உயர்பொருளைக் கண்டீர்? போம், போம், ஐயா" என்று சொல்லி அனுப்பிவிட்டாள்.

**12. சித்திராவின் மறுதளிப்புக்குக் காரணங்கள்**

அருச்சுனனது மனத்தைக் கவருவதற்காகவே தேவதைகளுடைய அருளால் அழகைப்பெற்ற சித்திரா, தனது கோரிக்கை நிறைவேறுந் தருணத்தில், திடீரெனத் தான் விரும்பினதைக் கைவிட்டதற்குச் சில காரணங்கள் உண்டு. முதலாவது. அவள் இதற்கு முன் அருச்சுனனைக் கண்ட இரு சமயங்களிலும் அவன் வீரரது உடையைத் தரித்திருந்தான். பிரம்மசரியவிரதம் கைக்கொண்டிருப்பதாகச் சொன்னானேயன்றிக் காஷாய உடை உடுத்தித் துறவறத்தில் அமரவில்லை. துறவியாக ஆன பிறகு, காதலாற் கட்டுண்டு இவ்வளவு எளிதில் துறவறத்தைக் கைவிடுவது கேவலமென்று அவளுக்குத் தோன்றிற்று. இரண்டாவது, மேனியழகு வெளிப் பூச்சென்றும், அது நிலையற்றதென்றும் மெய்க்காதலென்பது ஒருவரையொருவர் அறிவதால் உண்டாகும் விருப்பமென்றும், அவள் அறிந்துகொண்ட விஷயம். அருச்சுனன் தன்னிடம் கொண்டகாதல் மெய்க்காதலன்று, அதற்குத் தான் இணங்குவது சரியன்று என்பதாக அவள் எண்ணினாள்.

இக்காரணங்களால் அருச்சுனனது வேண்டுகோளை மறுத்த சித்திராவின் மனம் ஸ்திரமான நிலையில் இருக்கவில்லை. ஏனெனில் அவளுக்கு முன்னமே உண்டான காதலின் வெப்பம் அவளை உள்ளூரத் தகித்தது. ஆகவே அருச்சுனன் அடுத்தடுத்துப் பல தடவை அவளை அணுகி வேண்டிக் கொண்டபோது, ஒரு சமயம் தன்னை அறியாமலே அவனது வேண்டுகோளுக்கு இணங்கினாள். தனது கொள்கைக்கு மாறுதலாக மணக்கச் சம்மதித்தது தவறோ என்று அவள் மன வேதனைப்பட்டு, அவளைக் காக்கும் தேவதைகளான மன்மதனையும் வஸந்தனையும் தியானித்தாள்.

13. சித்திராவின் சஞ்சலமான மனோநிலை

அத்தேவதைகள் அவள்முன் தோன்றி, அவள் மணக்கச் சம்மதித்ததில் தவறு ஒன்றுமில்லையென்றும், இம்மணம் நன்மையையே பயக்குமென்றும் உரைத்தனர். வஸந்தன், "பெண்ணே! நான் சொல்வதைக் கேள். இப்போது நீ புதிய யௌவன பருவத்திலிருக்கிறாய். மலரினழகைக் கண்ட வண்டு மலரின்மேல் உட்காருவது போல, இப்போது உன்னழகைக் கண்டு உன் காதலர் உன்னை விரும்புகிறார். மலர்ப்பருவத்துக்குப் பின் கனிப்பருவம் வரும். இளவேனிற் காலத்தில் அழகிய மலர்களால் பிரகாசிக்கும் மரங்கள், முதுவேனிற் காலத்தில் கனிகளைச் சொரிந்து விளங்குவதுபோல, நீ உனது குணங்களால் உன் காதலரைக் களிப்பிக்கப்போகிறாய். அப்போது உன் கணவர் உன் குணங்களைக் கண்டு, உன்னை உள்ளபடியே அறிந்து, உன்னிடம் நிலைத்த மெய்க்காதலை அடைவார். இப்போது உன் கணவரோடு களித்து இரு. மெய்க்காதல் நாளடைவில்

14. தேவதைகள் சித்திராவின் மனத்தைத் திடப் படுத்தியது

உண்டாகும்" என்று மெய்க்காதலின் தத்துவத்தை விளக்கிஞர்.

அருச்சுனனை மணந்து வாழ்வதால் நன்மை உண்டாகுமென்று தெரிந்துகொண்டபோதிலும், சித்திரா தன் கணவரை இரண்டு நிபந்தனைகளுக்கு உட்படுத்தின பிறகே அவரோடு வாழ்க்கையை நடத்தச் சம்மதித்தாள்

15. சித்திரா தன் காதலரை இரு நிபந்தனைகளுக்கு உட்படுத்தியது

முதலாவதாக, ஓராண்டுகாலத்திற்குத் தாமிருவரும் காட்டினிடையிலுள்ள ஒரு கிரஹத்தில் தமது வாழ்க்கையை நடத்தவேண்டும். இரண்டாவதாக, அந்த ஆண்டுக்குள் தனது ஊரையோ பேரையோ கேளாமல் இருக்கவேண்டும். இந்த ஓராண்டு வாழ்க்கையில் தன் காதலர் தன்னை உள்ளபடி அறிந்துகொள்ள வேண்டுமென்பதும் இருவர் மனங்களும் ஒற்றுமைப்பட்டு மெய்க்காதல் உண்டாகுமென்பதும், மெய்க்காதல் உண்டாஞல் மட்டுமே தன் மணம் பூர்த்தியாகுமென்பதும் சித்திராவின் கொள்கைகள்,

தம்பதிகள், தாம் செய்துகொண்ட உடன்பாட்டின்படி ஓராண்டு காலம் காட்டினிடையில் இன்பமாகக் காலங்கழித்தார்கள். இவ்வாண்டிற்குள் சித்திராவின் கலைத்திறமையையும், மேலான குணங்களையும், மனப்பூர்வமான அன்பையும் அருச்சுனன் கண்டுகொண்டான்.

16. ஸதிபதிகளின் இன்ப ஆண்டு

ஒருநாள் அருச்சுனன் சித்திராவின் அதிசயமான குணங்களையுஞ் செயல்களையுங் கண்டு மனம் பூரித்து, "பிரியே! நீ ஒரு தங்க விக்கிரஹத்துள் மறைந்து உறையும் ஒரு தெய்வம் என்பதாக எனக்குத் தோன்றுகிறது" என்கிருன். இந்த வார்த்தைகளிலிருந்து, சித்திரா நிபந்தனை செய்த

ஓராண்டு அருச்சுனனது மோகத்தை மெய்க்காதலாக மாற்றுவதற்குப் பயன்பட்டதென்று தெரிகிறது.

சித்திரா யௌவனபருவத்துக்குப் பின் கனிப்பருவமென்று சொல்லத் தகுந்த மாதர்ப்பருவத்தை அடைகிருள். அருச்சுனன் அவளை உள்ளபடி அறிந்ததால், அவனது இளங் காதல் மெய்க்காதலாக மாறிவிடுகிறது. அப்போது சித்திரா தன் கணவருக்குத் தன் பிறப்பு வளர்ப்புகளைப்பற்றித் தெரிவிக்கிருள். தான் அந்நாட்டு அரசியான சித்திரா என்றும், ஒரு வீரமாது என்றும், எல்லா விரதீரச் செயல்களிலும் அரசாங்கக் காரியங்களிலும் அவருக்கு வாழ்க்கைத் துணைவியாக இருக்கக்கூடியவளென்றும் சொல்கிருன். மேலும், தனக்குப் பிறக்கும் குழந்தை ஆண்மகவாக இருக்குமேயாயின், அக்குழந்தைக்குச் சகல வித்தைகளையும் தானே கற்பித்து, இரண்டாவது அருச்சனனாக அவரிடம் அனுப்பப்போவதாகவும் சொன்னாள். இச்சொற்களைக் கேட்டதும் அருச்சனன் மனம் பூரித்து, "இன்றே என் வாழ்க்கையின் இன்பம் பூர்த்தியாயிற்று" என்று விடையளித்தான்.

17. மெய்க்காதலின் வெற்றி

மெய்க்காதல் விளங்குக! மங்களம் பொங்குக!

## 2. இந்நாடகத்தின் விசேஷங்கள்

இந்நாடகம் ஓர் உத்தமஸ்திரீயின் வாழ்க்கைச் சித்திரம். சித்திரா என்ற கதாநாயகியின் முழுப்பெயர் சித்திராங்கதை. அருச்சுனன் சித்திராங்கதையை மணந்த கதை மஹாபாரதம் ஆதிபர்வம் 235, 237-ஆவது அத்தியாயங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

1. மூலகதை மஹாபாரதந்தில் உள்ளது.

அக்கதையின் சுருக்கத்தை இந்நாடகாசிரியர் இந்நாடகத்தின் முகவுரையாக எழுதியிருப்பதைக் காணலாம். முழு வரலாறும் இப்புத்தகத்தில் 'நாடக விமர்சனை' என்ற பாகத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. அந்த மூல கதையை ஏற்றவாறு மாற்றிக்கொண்டு, ஒரு விந்தையான நாடகமாக இயற்றியிருப்பது மஹாகவி இரவேந்திரநாதரின் அபூர்வமான கற்பனு சக்தியைப் புலப்படுத்துகிறது.

இது ஓர் ஒப்பற்ற காதல் நாடகம். முதல் மூன்று காட்சிகளிலும் சிங்கார ரஸம் ததும்புகின்றது. கதாநாயகி கதாநாயகனைக் கண்டு காதலித்ததும், அப்போது அவன் மணக்க இயலாது என்று கூறினதும், சிறிது காலத்துக்குப் பிறகு யௌவனத்தின் வனப்பையடைந்த கதாநாயகியை அவன் கண்டு விரும்பியதும், அச்சமயம் கதாநாயகி அவனைத் தகாதவனென்று எண்ணி மறுத்ததும், பிறகு இணங்கினதும், ஒரு விசித்திரமான காதல் சித்திரமாகப் புனையப்பட்டிருக்கின்றன.

2. விசித்திரமான காதல் சித்திரம்

நமது கல்யாணங்களில் மணப்பெண் பாடும் பாட்டுக்களில், "ஊசிமேல் தவங்கிடந்து உத்தமனைப் பெற்றேன்"

என்று தொடங்கிப் பாட்டும் ஒன்று உண்டு.

**3. கதாநாயகியின் தவம்**

அப்பாட்டிற் சொல்லியபடி இந்நாடகத்தின் கதாநாயகி, தான் அருச்சுனனைப் பதியாக அடைய வெண்டுமென்று தவம் புரிகிறாள். தவத்தின் பயனாக சர்வாங்க சுந்தரியாக மாறி, அருச்சுனனது மனதைக் கவருகிறாள். எல்லா ஸ்திரீகளும் யௌவன பருவத்தில் அழகைப் பெறுகிறார்களானதால், கதாநாயகி அழகைப் பெற்றதில் அதிசயம் யாதுமில்லை. ஆயினும் அழகென்பது தெய்வத்தின் அருளால் கிடைப்பது என்பதையும், அது நிலையானதன்று என்பதையும், ஆனாலும் அது நற்பயன்களை அளிப்பதற்கு ஒரு சாதனமாக உபயோகிக்கத் தக்கதென்பதையும் இந்நாடகம் விளக்குகிறது.

**4. கதாநாயகியின் இஷ்டதேவதைகள்**

கதாநாயகியின் தவத்தின் பயனாக மன்மதனும் வஸந்தனும் அவளது கண்முன் பிரசன்னமாகி, அழகு வரம் அளித்ததோடு அவளது பக்தியாற் பிரீதியடைந்து அவளது இஷ்ட தேவதைகளாக ஆகிறார்கள். கதாநாயகி இஷ்ட தேவதைகளான மன்மதனையும் வஸந்தனையும் தியானிக்கும்போதெல்லாம், அவர்கள் அவள் கண்முன் தோன்றி, அவளுக்குண்டாயிருந்த ஐயங்களைக் கேட்டு, அவளுக்கு மனத்தெளிவை உண்டு பண்ணுகிறார்கள். உத்தம நண்பர்களின் செயல்கள், வேண்டும்போது உற்ற துணையாக இருப்பதும், மனத்தெளிவு உண்டுபண்ணுவதும், நல்வழி காட்டுவதும் என்று கூறப்பட்டிருக்கிறது. அக்கூற்றுக்கேற்ப, இரு தேவதைகளும் கதாநாயகிக்கு வேண்டியபோது பிரசன்னமாகி உதவி செய்பவர்களாயும், நற்புத்தி சொல்லுபவர்களாயும் இருக்கிறார்கள். அனேக நாடகங்களில் மன்மதனது விஷமங்களைக் காண்கிறோம். தகாத ஸ்திரீ புருஷர்களிடையில் உண்டாகும் காதல் பல தீங்குகளுக்குக்

காரணமாகிறது. சித்திராவும் அருச்சுனனும் அப்படிப்பட்ட ஸ்திரீபுருஷர்களன்று. அவர்கள் இணையான ஸதிபதிகளானதால், மன்மதன் அவர்களிடையில் காதலை உண்டாக்கினது இருவருக்கும் நன்மையை அளித்தது.

கதாநாயகி தனது மேனியழகைக் கொண்டே அருச்சுனனது காதலை அடைந்தாளென்றாலும், அருச்சுனன் தன்னை உள்ளபடி அறிந்துகொள்ளாமலே தனது மேனியழகொன்றிலேயே ஈடுபட்டுத் தன்னை

**5. மெய்க்காதலின் இலட்சணங்கள்**

மணந்ததில் சித்திராவிற்கு மனத்திருப்தி உண்டாகவில்லை. மேனியழகு நிலையில்லா அழகென்றும் உள்ளழகே உண்மையான அழகென்றும் அவள் அறிந்தவள்.

மேனியழகும் மேற்பூச்சழகும்
ஆடை யழகும் அணியழகும்
நிலையன்று — அன்பினழகும்
கலையழ குங்கற் பழகுமே நிலை.

ஸ்திரீ புருஷர்கள் ஒருவருக்கொருவர் மேனியழகில் மோகமடையும் காதல் மெய்க்காதலன்று என்பதும் ஸ்திரீ புருஷர்கள் ஒருவரையொருவர் உள்ளபடி யறிந்து, குணங்களில் ஈடுபடுவதால் உண்டாகும் காதலே மெய்க்காதல் என்பதும் அவள் அறிந்த விஷயங்கள். மெய்க்காதலை உண்டாக்க வேண்டுமென்பதே அவளது விருப்பம். மணம் முடிந்தபிறகு தம்பதிகள் நடத்தும் வாழ்க்கையில் அருச்சுனன் தன் மனைவியின் அன்பையும் ஆற்றலையும் அறிகிறான். இந் நாடகத்தின் இரண்டாம் பாகம், அதாவது நான்காம் காட்சிமுதல் ஒன்பதாம் காட்சிவரை, மோகத்திலுண்டான அருச்சுனனது காதல் மெய்க்காதலாக மாறிற்று என்பதைக் காண்பிக்கிறது. வாழ்க்கையின்பம் பூர்த்தியாவதற்குத் தம்பதிகளுக்குள் மெய்க்காதலுண்டாவது அத்தியாவசியம்.

புஷ்பங்கள் அரும்புகளாகத் தொடங்கி மலர்களாக ஆகிப் பிறகு காய்கனிகளாக ஆகின்றன வென்ற இயற்கைத் தத்துவத்தை ஆசிரியர் மனத்திற்கொண்டு, ஸ்திரீகளின் வாழ்க்கையில் புஷ்பங்களுக்குள்ள மாதிரியே மூன்று பருவங்கள் உள்ளனவென்று இந் நாடகத்தில் சித்தரித்திருக்கிறார். பூவின் மொட்டு ஒரே இரவில் மலராக ஆகி அழகைப் பெற்று மணத்தை வீசுவதுபோல, பாலிய பருவத்திலிருக்கும் ஸ்திரீ யௌவன பருவத்தை யடைந்த சொற்பகாலத்துக்குள் அழகு நிறைந்த வனிதையாக ஆகிறாள். நாடகத்தின் முதற் காட்சியில் சித்திராவை அரும்புப் பருவமான பாலிய பருவத்தில் காண்கிறோம். ஸ்திரீகளுக்குரிய லக்ஷணங்கள் இன்னும் உண்டாகவில்லை.

6. ஸதிரீகளின் வாழ்க்கையிலுள்ள முப்பருவங்கள் (அரும்பு, மலர், கனி)

இரண்டாங் காட்சி முதல் எட்டாங் காட்சிவரை சித்திராவை மலர்ப்பருவமான யௌவன பருவத்தில் திவ்விய சுந்தரியாகக் காண்கிறோம். மலர் வாடி வீழுவது போல ஸ்திரீயின் அழகு சிறிது காலத்திற்குப் பிறகு குறைந்துவிடுகிறது தாவரங்களது மலர்ப் பருவமும் ஸ்திரீகளது அழகும் நிலைத்து நிற்பவையன்று.

மலர்ப்பருவத்துக்குப்பின் வருகிற பருவத்தில் கனிகள் உண்டாகின்றன. அக் கனிகள் சகல ஜீவராசிகளும் ருசித்து உண்பதற்கும் தாவர வர்க்கத்தை விருத்தி செய்வதற்கும் பயன்படுகின்றன. அதேமாதிரி மாதர்ப் பருவத்தை யடைந்த ஸ்திரீ, மக்களைப்பெற்றுக் குடும்பத் தலைவியாகித் தன் குடும்பத்துக்கும் உலகத்துக்கும் நன்மை செய்யக்கூடியவளாகிறாள். ஆகவே பாலியம், யௌவனம், மாதர் என்ற முப்பருவங்களுள் மாதர்ப் பருவமே நிலையான பயனை அளிக்கக்கூடியது. ஆயினும் மலர்ப்பருவத்தின் நற்பயனாகவே கனிப்பருவம் உண்டா

கிறது. அதுபோலவே, ஸ்திரீகள் மாதர்ப்பருவத்தில் சிறப்படைவதற்கு யௌவன பருவம் முதலே நன்றாக நடந்து கொள்ளவேண்டும். இந்த விவேகம் கதாநாயகிக்கு இருந்தமையால் அவள் மணமாகிச் சிறிதுகாலத்திற்குள் தன் கணவரது பூரணவிசுவாசத்தைப் பெறுகிறாள். அவளது கணவர் அவளை ஒரு தெய்வமென்று எண்ணும்படி நடந்துகொள்கிறாள்.

நாடகத்தின் ஒன்பதாவது காட்சியில் சித்திராவை நாம் மூன்றாம் பருவத்தில் காண்கிறோம். அப்போது அவள் கணவரது அபிமானத்தைப் பெற்று அவருக்குப் பூரணமான வாழ்க்கைத் துணைவியாகக் காணப்படுகிறாள். ஸ்திரீகளது வாழ்க்கையின் பருவங்களைப் புஷ்பங்களின் பருவங்களுக்கு ஒப்பிட்டிருப்பது ஆசிரியரின் ஓர் அழகிய கற்பனை. ஸ்திரீகளின் அழகு தானாகவே வந்து. தானாகப்போகும்படியானதென்றும், அவர்களது குணங்களும் சுய சக்திகளுமே நீடித்த பயன்களைக் கொடுப்பவை என்பதும் நாடக ஆசிரியருடைய போதனையாகும்.

கதாநாயகி பூரணமான கலைப்பயிற்சி பெற்றவள். தொன்றுதொட்டு நமது நாட்டில் கலைப்பயிற்சி பெற்ற மாதர்கள் இருந்திருக்கிறார்கள். கலைகளுக்குத் தெய்வம் ஸரஸ்வதி யென்ற ஸ்திரீ தெய்வம். வேதங்கள் உண்டான முற்காலத்திலேயே கலைகளில் தேர்ச்சி பெற்ற ஸ்திரீகள் இருந்திருக்கிறார்கள். ஆதி சங்ராசாரியாருக்கும் மண்டனமிசிரர் என்ற தத்துவ சாஸ்திரிக்கும் நடந்த தர்க்கத்துக்கு மண்டனமிசிரரது மனைவியான பாரதி என்பவரே அதிபதியாக விருந்து இரு கட்சிகளின் நியாயங்களைச் சீர் தூக்கி முடிவுரை சொல்லும்படி நியமிக்கப்பட்டார். ஔவையார் இயற்றிய செய்யுட்கள் இன்றும் நமக்கு இன்பத்தையும் அறிவையும் அளிக்கின்றன. இந்நாடகத்தில் சித்திரா வீரர்க்குரிய கலைகளிலும்

7. சித்திராவின் கலைப்பயிற்சி

அரசாங்க முறைக் கலைகளிலும் பயிற்சிபெற்றுச் செவ்வனே தனது நாட்டை அரசாட்சி செய்தாளென்று கூறப்பட்டிருக்கிறது.

இந்நாடகம் ஸதிரீஜன்மத்தின் பெருமையை விளக்கிக் காட்டுகிறது. எட்டாவது காட்சியில் அருச்சுனன் சித்திராவிடம், "உன்னால் நான் அடையும் பயன்களுக்கு நான் ஈடான கைம்மாறு செய்யமுடியாதவனு யிருக்கிறேன்" என்று சொல்கிருன். அதாவது தான் பத்தினிக்குச் செய்வதைவிட பத்தினி தனக்குச் செய்வது மேலானதென்கிருன். இவ்வார்த்தைகள் அவனுக்கிருந்த அபிமானத்தால் சொன்னதாக வைத்துக்கொண்டபோதிலும், உத்தமமான மனைவியினால் கணவன் அடையும் பயன்கள் அளவற்றவை என்று கூறுவது மிகையாகாது. உண்மை யென்னவென்று ஆராய்ந்து பார்த்தால், ஸ்திரீபுருஷ ஜன்மங்களுக்குள் கடமைகளில் வித்தியாசமுண்டே யன்றி, பயனிலோ பெருமையிலோ உயர்வு தாழ்வு இல்லை.

8. ஸ்திரீ ஜன்மத்தின் பெருமை

சித்திரா அபூர்வமான ஸ்திரீயானதால், அவளது பெருமை தனிப்பட்டது. அவள் அறிவும் ஆற்றலும் பெற்ற வீரமாது. எல்லாக் காரியங்களையும் விவேகமாய் ஆராய்ந்து தெளிவான புத்தியோடு செய்பவள். மெய்க் காதலின் தத்துவத்தை அறிந்த அவள், முதலில் அழகினால் தன் காதலருக்கு உண்டான காதலைப் பிறகு தன் அன்பினால் நிலைபெறச் செய்த உத்தம பத்தினி. காதலுணர்ச்சிகளுக் குட்பட்டிருந்தபோதுங்கூட, அவளது விவேக புத்தி அவளை விட்டு அகலவில்லை. அவள் ஆதிமுதல் தனக்கிருந்த சுதந்திரத்தைச் சரியான முறையில் பயன் படுத்தினவள்.

## நாடகாசிரியரது முகவுரை

இந்நாடகம் மஹாபாரதத்திலுள்ள கீழ்க்கண்ட கதையை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது.

அருச்சுனன் ஒரு காரணம்பற்றிச் சிறிதுகாலம் தனது நாட்டைவிட்டு வெளியூர்களில் யாத்திரை செய்ய வேண்டியிருந்தது. அந்த யாத்திரையில் மணிபுரமென்ற நகரத்துக்கு வந்தான். அங்கே அந்நாட்டு அரசனுயிருந்த சித்திரவாகனனது அழகிய புத்திரியான சித்திராங்கதையைக் கண்டான். அவளிடத்தில் மோகங்கொண்டு, அரசரை அணுகி அவரது புத்திரியைத் தனக்கு மணம் செய்விக்கும்படி கேட்டான்.

சித்திரவாகனன் அவனை யார் என்று வினவ, தான் பாண்டவர்களுள் ஒருவனுன அருச்சுனன் என்பதாக விடையளித்தான். அப்போது சித்திரவாகனன் தனது வம்சத்தின் சரித்திரத்தை அருச்சுனனுக்குப் பின்வருமாறு சொன்னுன்.

மணிபுர ராஜவம்சத்தில் தனது மூதாதைகளில் ஒருவரான பிரபஞ்சனன் என்பவர் வெகுகாலம் மக்கட்பேறின்றி, தனக்குச் சந்ததி உண்டாகவேண்டுமென்று கோரிக் கடுந்தவம் புரிந்தார். அவரது தவத்தைக் கண்டு சந்தோஷித்த பரமசிவக்கடவுள் அவருக்கு ஒரு வரமளித்தார். அவருக்கு ஒரு சந்ததி உண்டாகுமென்றும், அவரது வம்சத்தில் தலைமுறைக்கொரு சந்ததி உண்டாகுமென்றும் கூறினுர். அன்றுமுதல் தலைமுறைக்கு ஓர் ஆண்மகவாக வம்சம் விருத்தியாகிவந்தது. முதன் முதலாக மணிபுர ராஜ வம்சத்தில் உண்டான பெண்சந்ததி தனக்குப் பிறந்த இந்த ஒரே பெண். இவள் மூலமாயே இந்த வம்சம் இனிமேல் விருத்தியாகவேண்டும். இவளைத் தான் ஒரு

புத்திரனுகவே தான் பாவித்து வந்திருப்பதாகவும், தனக்குப் பிறகு இவளே அரசியாக வேண்டுமென்று தான் நியமித்திருப்பதாகவும் சொன்னுன்.

சித்திரவாகனன் மேலும், "இவளுக்குப் பிறக்கப் போகும் ஒரே புத்திரன் எனது வம்சத்தை விருத்திசெய்ய வேண்டியவனுகவிருக்கிருன். உம்முடைய அந்தப் புத்திரனை நீர் உம்முடன் அழைத்துக்கொண்டு போகாமல் எங்களுக்கே உரிமையாக்கவேண்டும். இந்த நிபந்தனைக்குட் பட்டு நீர் என் புத்திரியை மணக்கலாம்" என்று சொன்னுர்.

அருச்சுனன் அவர் சொன்னபடியே செய்வதாக வாக்களித்துச் சித்திராங்கதையை மணந்து, அவளது பிதாவின் நகரத்திலேயே மூன்ருண்டுகள் வசித்தான். ஒரு புத்திரன் பிறந்ததும், பிரியத்துடன் தனது மனைவியை ஆலிங்கனஞ் செய்துவிட்டு, அவளிடத்திலும் அவளுடைய பிதாவிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான்.

———

## நாடக பாத்திரங்கள்

### தேவதைகள்

மன்மதன்: காதற் கடவுள்.

வஸந்தன்: வஸந்த பருவத்துக்கு அதிபதியான தேவதை.

### மாந்தர்கள்

சித்திரா: மணிபுர அரசனின் புத்திரி.

அருச்சுனன்: குரு வம்சத்திலுதித்த பாண்டவவீரன், தன் நாட்டைவிட்டு வெளித்தேச சஞ்சாரஞ் செய்யும் போது சிறிதுகாலம் மணிபுரத்துக்கடுத்த காட்டில் தங்கியிருக்கிறான்.

கிராமவாசிகள்: மணிபுர நாட்டின் எல்லைப்புரக் கிராமங்களில் வசிக்கும் குடிகள்.

## காட்சி 1

[காட்டில் சித்திரா தவத்தில் அமர்ந்திருக்கையில், மன்மதன், வஸந்தன் என்ற இரு தேவதைகள் வருகிறார்கள்.]

சித்திரா

(மன்மதனைப் பார்த்து) சுவாமி! வணங்குகிறேன். பஞ்சபாணங்களையுடைய காதற்கடவுள் தேவரீர் தானே?

மன்மதன்

ஆம், பிரமன் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கத் தொடங்கினபோது, முதன் முதலாக என்னையே படைத்தார். ஸ்திரீ புருஷர்கள் மனத்தில் காதலுணர்ச்சிகளை எழுப்புவதும், காதலின் அலைகளால் உண்டாகும் இன்ப துன்பங்களுக்கு அவர்களை உட்படுத்துவதும், அவர்களைப் பிணைத்து ஒன்றுகூடி வாழச்செய்வதும், நான் செய்யும் வேலைகள்.

சித்திரா

ஐயனே! உமது பாணங்களுக்கு இலக்கான மாந்தரது மனம் எவ்வாறு துடிக்கிறதென்பதை நான் சுய அனுபவத்தால் அறிந்துளேன். உமது அருளை நாடியே தவம்புரிகிறேன்.

சித்திரா

(மற்ருெரு தேவதையைப் பார்த்து) தேவரீர் யாரென எனக்குத் தெரிவிக்கும்படி வேண்டுகிறேன்.

வஸந்தன்

பருவங்களுக்கெல்லாம் நான் அதிபதி. முக்கியமாக நான் வஸந்த ருதுவில் உயிரற்றனபோலிருக்கும் தாவரங்களுக்குப் புத்துயிரளித்து அவற்றைத் தளிரும் இலையும் மொட்டும் மலருமாக விளங்கச் செய்கிறேன். ஆகவே என்னை வஸந்தன் என்ற பெயரால் அழைக்கிருர்கள். உலகத்துக்குத் தேய்வையும் அழிவையுமுண்டாக்கும் தீயசக்திகளைப் பின்தொடர்ந்து எதிர்த்துப் போராடி, புதிய இளமையை உண்டாக்குவது எனது வேலை. நான் என்றுமழியா இளமையை யுடையதேவதை.

சித்திரா

(வணங்கி) வஸந்த பகவானே! அடியாள் வணங்குகிறேன்.

மன்மதன்

பெண்ணே! உன் கதையைச்சொல். இந்த இளம் வயதில் எதற்காக உனது சரீரத்தைப் பட்டினியால் உலர்த்திக் கஷ்டப்படுத்திக்கொண்டு கடுந்தவம் புரிகிருய்? காதலின்பத்தை விரும்புகிறவர்களுக்கு அவ்வின்பத்துக்கு ஆதாரமாயிருக்கிற தமது தேகத்தை வற்றவைப்பது ஏற்ற முறையன்று. நீ யார்? உனக்கு வேண்டியது என்ன?

சித்திரா

சுவாமி! என் பெயர் சித்திரா. நான் மணிபுர அரசரின் ஒரே புதல்வி. எங்கள் வம்சத்தில் இதற்குமுன் பெண் பிறந்ததேயில்லை. எங்கள் வம்சத்துக் கதையைச் சொல்கிறேன், கேளுங்கள். என் மூதாதைகளிலொருவருக்குப் பரமசிவன் கொடுத்த வரத்தால் ஒவ்வொரு தலைமுறைக்கும் ஒரு புருஷ சந்ததி உண்டாகி, அவர்கள் வரிசையாக அரசாண்டு, வம்சத்தை வாழையடி வாழையாக விளங்கவைத்தனர். ஆனால் எக்காரணத்தாலோ என் விஷயத்தில் தொன்றுதொட்டு வந்த முறை தவறி, என் பெற்றோருக்கு நான் ஒரு பெண்ணாகப் பிறந்தேன்.

மன்மதன்

இவ் விஷயத்தைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆண்மகவு இல்லாததால், உன்னை உன் பிதா ஓர் ஆண் பிள்ளைபோலவே வளர்த்துவந்திருக்கிறார். உனக்கு வீரருக்குரிய விற்பயிற்சியையும், அரசாட்சிக்கு வேண்டிய பல கலைகளையும் கற்பித்திருக்கிறாரென்பது எனக்குத் தெரியும்.

சித்திரா

என் பிதா எனக்கு ஓர் ஆண்பிள்ளை போலவே பயிற்சி அளித்திருப்பதால், நான் மற்றப் பெண்களைப் போல அந்தப்புரவாசினியாக இராமல், ஆண்களைப் போலவே உடையுடுத்து வெளியே போய் வெளிப்பழக்கங்களை அடைந்திருக்கிறேன். அதனால் எனக்கு இப்போது

காமராசர் பல்க

ஒரு மனக்குறை உண்டாகிவிட்டது. வில்லம்பை எய்யக் கற்றேனேயன்றி, ஆடவர் மனத்தைக் கவருவதற்காக, ஸ்திரீகளுக்கு முக்கியமாய் வேண்டிய கண்ணம்பை எய்யக் கற்கவில்லையே யென்பது எனது மனக்குறை.

மன்மதன்

ஸ்திரீகளுக்குத் தமது கண்ணுேக்கினுல் ஆடவர்களை வசியப்படுத்தும் சக்தி தக்க பருவம் வந்ததும் இயற்கையாகவே உண்டாகிறது. இது பிறர் கற்பிக்கவேண்டிய வித்தையன்று. ஒரு ஸ்திரீயினுடைய பிரியமான பார்வைக்கு ஒருதரமாயினும் இலக்கான எந்த ஆடவனும் இவ்வுண்மையைத் தனது அனுபவத்தால் அறிகிருன். அது போகட்டும், உன் கதையை மேலே சொல், கேட்போம்.

சித்திரா

ஒரு நாள் எனக்கு நடந்த சம்பவத்தைச் செவி கொடுத்துக் கேளுங்கள். நான் காட்டில் வேட்டையாடும்போது, பூரணு நதிக்கரையண்டை வந்துசேர்ந்தேன். ஒரு மானின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அடர்ந்த காட்டிற்குள் நுழைந்தேன். அவ்விடத்தில் ஒரு மரத்தில் என் குதிரையைக் கட்டிவிட்டு ஓர் ஒற்றையடிப் பாதையில் நடந்து போனேன். மரத்து நிழலில் பாதைக்குக் குறுக்கே உலர்ந்த சருகுகளின்மேல் ஒரு மனிதர் படுத்திருந்ததைக் கண்டு, எழுந்து வழியைவிட்டுப் போகும்படி அதிகார தொனியில் சொன்னேன். என் உத்திரவுக்கிணங்கி அவர் உடனே எழுந்திருக்கவில்லை. அப்போது நான்

எனது வில்லின் கூரிய நுனியால் அவரைச் சுருக்கெனக் குத்தினேன். உடனே அவர் எழுந்து பாதையை விட்டு விலகிநின்று, புன்முறுவலுடன் என்னைப் பார்த்தார்.

* அவர் எழுந்துநின்றபோது கண்ணிறைந்த அவரது தோற்றம் என் மனத்தைக் கவர்ந்தது. அவரது கம்பீரமான உருவமும், பரந்தமார்பும், வலிமைபெற்ற புஜங்களும், உத்தம வீரருக்குரிய முகலக்ஷணங்களும் எனக்குக் கண்கொள்ளாக் காட்சியளித்தன. அவரைப் போன்ற புருஷனை நான் என் நாட்டிற் கண்டதேயில்லை. நான் வில்லின் நுனியால் குத்தினதின் வலியை அவர் கொஞ்சமேனும் பொருட்படுத்தினதாகத் தோன்றவில்லை.

என்ன வீரம்! என்ன வலிமை! அவரது தேகத்தையும் அவயவங்களையும் கண்டதும், அவைகளுக்கு எனது தேகமும் அவயவங்களும் ஈடானவையன்று என்பது எனக்கு விளங்கிற்று. அவ்வீரரைக் கண்டவுடனே நான் ஒரு புருஷனன்று, ஒரு ஸ்திரீ, என்ற உணர்ச்சி எனக்கு உண்டாயிற்று.

மன்மதன்

நன்று, நன்று! உன் மனத்தில் இம்மாதிரியான உணர்ச்சியை உண்டாக்குவதற்கு நானே காரணம் என்பதை அறிந்துகொள். ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும், தக்க பருவத்தில் தகுந்த சந்தர்ப்பத்தில் சுபகரமான வேளையில், தம்மைத் தாம் அறிந்துகொள்ளும்

* அட்டைப் பக்கத்திலுள்ள படத்தைப் பார்க்கவும்.

சக்தியை நான் அளிக்கிறேன். சரி, மேலே என்ன நடந்தது?

சித்திரா

வியப்புடனும் பயபக்தியுடனும், நான் அம்மனிதரை, "நீங்கள் யார்?" என்று கேட்டேன். அவர், "நான் கௌரவ குலத்திற் பிறந்தவன். என் பெயர் அருச்சுனன்" என்றார். அருச்சுனன் என்ற பெயரைக் கேட்டதும், நான் திடுக்கிட்டு மெய்ம்மறந்து, அசைவற்ற ஒரு பதுமை மாதிரி நின்றுவிட்டேன்.

நாடெங்குங் கீர்த்திபெற்ற அருச்சுனவீரரா இவர்? நான் இன்னாரென்று தெரியாதபடி மாறு வேஷம் புனைந்து, அவரைத் தனித்த அஸ்திர சஸ்திரப் போட்டிக்கழைத்து, எனது பராக்கிரமத்தால் ஜயம் பெறவேண்டுமென்று அடிக்கடி கனவு கண்டுகொண்டிருந்த வீரரா இவர்? இவரை எதிர்த்து என்னால் ஒரு கணம் நிற்க முடியுமா? இவரை அறியாமலன்றோ நான் துணிகரமான வீணெண்ணங் கொண்டிருந்தேன்! "இவரது வீரத்துக்கும் புஜ பலத்துக்கும் எனது வீரமும் புஜபலமும் எவ்வளவோ அற்பமானவை யென்று கண்டுகொண்டேன். இவரை அண்டி இவரது காலடியில் இருப்பதே என்க்குப் பாக்கியமாகும்." என்று என்மனம் எண்ணித் திகைப்படைந்தது.

இவ்வாறு எண்ணிக்கொண்டு நான் நிற்கையில், அருச்சுனர் அவ்விடத்தை விட்டு எங்கேயோ காட்டிற்குட் போய் விட்டார். சுய நினைவு எனக்கு வந்ததும், "மனமே, நீ என்ன பிழை செய்து விட்டாய்?

அவரை வணங்கி வாய் திறந்து ஒரு வார்த்தை பேசினுயா? நீ அவருக்குச் செய்த பிழையை மன்னிக்கும்படிக் கேட்டாயா? நற்பழக்க மில்லாத அற்பஸ்திரீயைப் போல அல்லவா நீ நடந்து கொண்டாய்!" என்று என் மனம் தன்னையே நொந்து கொண்டது.

மறு நாட் காலையில் நான் ஆண் உடைகளைக் களைந்து ஸ்திரீகளுக்குரிய அழகிய பட்டாடைகளைத்தரித்து பல ஆபரணங்களையும் அணிந்து கொண்டேன். இவ்வாறு அழகு செய்து கொண்டேனுகிலும், ஆடவரை வசீகரிக்கும் படியான சரீரலக்ஷணங்கள் என்னிடத்தில் இல்லை என்பதை நானே உணர்ந்தேன். ஆனுலும் நடப்பது நடக்கட்டுமென்று எண்ணி, அருச்சுனரைத் தேடும் பொருட்டுக் காட்டிற்குட் போனேன். அவரைக் காட்டிலுள்ள சிவன் கோவிலின் அருகாமையிற் கண்டேன்.

மன்மதன்

பெண்ணே! நடந்த விருத்தாந்தங்களைச் சுருக்கமாகச் சொல். காதலால் மாந்தர்களுக்கு உண்டாகும் உணர்ச்சிகளின் இரகசியங்களையெல்லாம் நான் அறிவேன். உனது மன உணர்ச்சிகளை எனக்கு விவரமாய்க் கூற அவசியமில்லை.

சித்திரா

சுவாமி! மேலே நடந்ததைச் சொல்கிறேன். அருச்சுனரைக் கண்டபோது அவரிடம் என்னென்ன சொன்னேனென்பதும் அவர் எனக்கு என்ன விடைகளையளித்தாரென்பதும் எனக்குத் தெளிவாய் நினைப்பிலில்லை. காதலால் துண்டப் பட்ட நான், வெட்கத்தை விட்டு

என்னென்னவோ அவரிடம் சொன்னேன். என்ன சொல்லி யும், எனது மனவிருப்பம் நிறைவேருததது கண்டு, என் மனமுடைந்து, நான் திரும்பி வந்து விட்டேன்.

முடிவாக அவர் சொன்ன சில சொற்கள், என் செவி களைக் காய்ச்சின ஊசியால் சூடினதுபோல் சுறுக்கெனக் குத்தின. அவர் முடிவாகச் சொன்னது, "நான் இப் போது பிரம்மசரிய விரதத்தைக் கைக்கொண்டிருப்ப தால், உன்னை மணக்க இயலாது" என்ற தீர்மானமான மொழிகள். காதற் கடவுளே! விரதமாவது விரதம்! கணக்கற்ற ரிஷிகளும். ஞானிகளும் ஒரு ஸ்திரீயிடம் காதல்கொண்டு அவளது காலடிகளில் தமது நீண்டகாலத் தவப்பயன்களை யெல்லாம் அர்ப்பணஞ் செய்திருக் கிருர்களன்றே?

நான் காட்டிலிருந்து திரும்பிவந்ததும் எனது வில்லை முறித்து அம்புகளைத் தீக்கிரையாக்கினேன். விற்பயிற்சி யினால் பலமடைந்த எனது புஜங்களை நான் வெறுத்தேன். ஆடவ பலத்தையடைந்தே னென்று நான் கொண்டிருந்த கர்வமெல்லாம் என்னைவிட்டு அடியோடு நீங்கிப்போ யிற்று. நான் கற்ற வித்தைகளொன்றும் எனக்கு இப் போது பயன்படவில்லையே! அருச்சுனரை எனது பதியாக அடையவேண்டுமென்ற விருப்பமொன்றே எனக்கு இப் போது இருக்கிறது. அவர் மனத்தைக் கவருவதற்கு ஏற்ற சக்தியை எனக்கு அளிக்கும்படி உங்களை வேண்டுகிறேன்.

மன்மதன்

கவலைப் படாதே! நான் உனக்கு உதவி புரிந்து, உலகப் பிரசித்தரான வீர அருச்சுனனை உன்முன்

நிறுத்தி உன்னுடைய ஆக்கினைக்கு உட்பட்டிருக்கச் செய்வேன்.

சித்திரா

உங்களது அபயமொழிகள் என் மனதுக்குத் தைரியத்தை அளிக்கின்றன. ஆயினும் நான் கேட்கவந்த வரத்தையும், அதைக் கேட்பதின் காரணத்தையும் உங்களுக்குச் சொல்லி விடுகிறேன்.

அருச்சுனருக்கு என்னிடத்தில் பட்சம் உண்டாகும்படி செய்வது. என் சுயமுயற்சியாலேயே ஆகக்கூடிய காரியமென்றே நான் எண்ணுகிறேன், எப்படியென்றால், நான் அவருக்கு ஓயாது பணி செய்வேனாகில், என்றைக்காவது ஒரு நாள் அவருக்கு என்னிடத்தில் பட்சமுண்டாகுமென்பது திண்ணம். நான் அவரது பக்கத்தில் நின்று, சாரதியாக இரதத்தை ஓட்டுவேன். வேட்டையாடுங் காலத்தில் துணிச்சலாக அவரோடு கூட வேட்டையாடி அவருக்கு உதவி புரிவேன். இரவில் அவர் கூடாரவாயிலைக் காப்பேன். பலமற்றவர்களைக் காப்பாற்றுவது, பாரபட்சமில்லாமல் நீதி செலுத்துவது, முதலிய க்ஷத்திரியரது கடமைகளை அவருடன் கூடவிருந்து புரிவேன். பலவிதங்களிலும் நான் செய்யும் வேலைகளைக் கண்டு, கடைசியாக ஒரு நாள் அவர் என்னைக்கூர்ந்து பார்த்து "எனக்கு எப்பொழுதும் பணிவிடை செய்துவரும் இந்தப் பையன் யாவன்? எனக்கு முற்பிறப்பில் உண்மையாக வேலை செய்த அன்பர்களில் ஒருவன் இப்பிறப்பிலும் தொடர்ந்து எனக்கு வேலை செய்கின்றானோ?" என்று என்னை மெச்சுவார்.

இவ்வாறு என் முயற்சியைக் கொண்டே அருச்சுனரது அன்பை என்னால் அடைய முடியுமென்ற நம்பிக்கை எனக்குண்டு. ஒருதரம் தோல்வியடைந்ததும், மனக் களைப்படைந்து தலைவிதியை நொந்து செயலற்று ஏங்கி அழுதுகாலங்கழிப்பவள் நானன்று. ஆனாலும் என்னுடைய முயற்சியாலேயே அருச்சுனரை வசப்படுத்துவது என்ற பெரிய காரியத்தைச் சாதிப்பதற்கு எவ்வளவு காலம் ஆகுமோ? ஒருவரது உண்மையான ஆத்ம குணங்களைப் பிறர் அறியச்செய்து, அவர்களது நிலைத்த மதிப்பை அடைவது ஒரு பூரணமான ஆயுட்காலத்து வேலையாகும். காதற் கடவுளான மன்மதரே! இளமைக் கடவுளான வஸந்தரே! எனது விருப்பம் விரைவில் நிறைவேறுவதற்காக ஒரே நாளைக்கு எனக்கு ஸ்திரீ சௌந்தரியங்களைப் பரிபூரணமாக அளிக்கும்படி வேண்டுகிறேன்.

மன்மதன்

பெண்ணே! நீ வேண்டும் வரத்தை நான் அளிக்கிறேன்.

வஸந்தன்

பெண்ணே! மன்மதன் ஒருநாளைக்கென்று அளித்த சௌந்தரியங்கள் உன்னிடம் ஓராண்டு காலத்துக்குத் தங்கும்படியாக நான் வரமளிக்கிறேன். உனக்குச் சகல நன்மைகளும் உண்டாகக் கடவது!

———

## காட்சி 2

[இடம் - காட்டிலுள்ள ஒரு சிவன் கோவிலின் வாசல். துறவற உடையில் அருச்சுனன் பிரவேசம்.]

அருச்சுனன்

[தனக்குள்] நேற்று அந்திப் பொழுதில் நான் கண்டகாட்சி எனது பகற்கனவா? அல்லது ஓர் உண்மையான காட்சிதானா? ஏரி கரையின் ஒரு மூலையில் நான் உட்கார்ந்திருந்தபோது, ஏதேதோ பழயநினைவுகள் என் மனதிற்கு வந்தன. அப்போது சௌந்தரியமே உருவெடுத்து வந்தது போன்ற ஓர் யௌவன ஸ்திரீயின் உருவம், மரங்களின் நிழலிலிருந்து வெளிவருவதைக் கண்டேன். அந்தப் பெண் ஏரியை நோக்கி வந்தாள். நீர்க்கரையிலுள்ள வெண்மையான ஒரு கல்லின் மேல் ஏறித் தன் பிம்பத்தை நீரிற் பார்த்தவண்ணம் சிறிது நேரம் நின்றனள். அம்மாதினழகை யாரால் வர்ணிக்க முடியும்? தூயவெண்மை நிறமுள்ள மிருதுவான அவளது கால்களின் ஸ்பரிசத்தால் பூமாதே ஆனந்தமடைகிறாளென எனக்குத் தோன்றிற்று. அவள் அணிந்திருந்த மெல்லிய துகில் அவளது வனப்புமிக்க தேகத்தோடு ஒருமித்து என் கண்ணைப் பறித்தது. தண்ணீரிற்றோன்றின தனது பிம்பத்தைப் பார்த்ததும், அவளுக்கே வியப்பு உண்டானது போன்ற முகக்குறிகளைக் கண்டேன். பிறகு அம்மாது தனது இடது கையால் அடர்த்தியான கூந்தலை

அவிழ்த்துவிட்டாள். வெகு நீளமான அக்கூந்தல் அவளது கால்கள் வரை தொங்கித் தரையிலும் புரண்டது. பிறகு தன் அவயவங்கள் ஒவ்வொன்றின் அழகையும் தனித்தனியாகப் பார்க்கவேண்டுமென்ற அவாக் கொண்டவள் போன்று, தான் உடுத்திக்கொண்டிருந்த துகிலை ஆங்காங்கு சிறிதளவு நீக்கி, வியப்புடன் உற்று நோக்கினாள். புது யௌவன சௌந்தரியம் தன் அங்கங்களில் சோபிப்பதைக் கண்டதும், அவளது முகத்தில் புன்னகை பூத்து விளங்கிற்று.

ஆனால், சற்று நேரத்துக்குள் திடீரென அவள் முகத்திலிருந்த முறுவல் மறைந்து, கவலைக் குறிகள் காணப்பட்டன. அவிழ்த்த கூந்தலை முடித்துக்கொண்டு துகிலால் தன் அங்கங்களை நன்றாக மூடிக்கொண்டு, ஒரு பெருமூச்சுடன் ஏரி கரையைவிட்டு மறைந்தனள்.

அவளைப்போன்ற கட்டழகியை நான் இதுவரை கண்டதில்லை. என் மனத்திலுள்ள இன்பக் கனவுகளெல்லாம் திரண்டு உருவாகி, ஆனந்தமயமான ஒரு காட்சியை ஒரு கணத்துக்கு எனக்களித்துவிட்டு மறைந்ததெனத் தோன்றிற்று.......

யாரோ கோயிற் கதவைத் திறக்கிறார்கள். யாரென்று பார்க்கிறேன்.

(சித்திரா கோவிற்குள்ளேயிருந்து வெளியே வருவதைப் பார்த்து) ஹா! நேற்று நான் கண்ட அழகிய நங்கையே இவள், மனமே! படபடக்காமல் இரு.

(சித்திரா பயந்து நிற்பதைக் கண்டு) மாதே! என்னைக் கண்டு பயப்படவேண்டாம். நான் ஒரு க்ஷத்திரியன்.

சித்திரா

சுவாமி நான் இக்கோவிலில் வசிப்பவள். மகானுன தாங்கள் எனது விருந்தினராக இருக்கவேண்டுமென்று வேண்டுகிறேன். எவ்விதங்களில் தங்களுக்கேற்ற உபசரணைகளைச் செய்யலாமென்பதை அறிய விரும்புகிறேன்.

அருச்சுனன்

மாதே! உன்னைக் கண்ணுற் கண்டதே நீ எனக்களித்த பெரிய விருந்தாக ஆய்விட்டது. எனக்கு நீ செய்யவேண்டியது யாதொன்றுமில்லை. ஆனுல் உன்னை ஒரு கேள்விகேட்க விரும்புகிறேன். கேட்கலாமா?

சித்திரா

தாராளமாய்க் கேளுங்கள்.

அருச்சுனன்

உன்னுடைய திவ்விய லக்ஷணம் பார்ப்பவர்களுக்கெல்லாம் ஆனந்தத்தை யளிக்கக்கூடியதாக இருக்க, எதற்காகக் கடுமையான விரதத்தை மேற்கொண்டு, ஒருவர் கண்ணிலும் படாமல் தனியாக இந்தக் காட்டுக் கோவிலில் தங்கியிருக்கிருய்?

சித்திரா

எனது மனத்தில் அந்தரங்கமான ஒரு விருப்பமிருக்கிறது. அது நிறைவேறவேண்டுமென்ற

கோரிக்கையுடன் பரமசிவனைத் தினந்தோறும் பூஜிக்கிறேன்.

அருச்சுனன்

இதென்ன விந்தை! உன்னை விரும்பி உலகத்தாரனை வருந்தவங் கிடக்கவேண்டியிருக்க, உனக்கே கைகூடாத விருப்பம் ஒன்றுளதா? நான் இப்பாரத நாடு முழுவதும் யாத்திரை செய்திருக்கிறேன். சிறந்த பொருள்கள் யாவற்றையும் நான் பார்த்திருக்கிறேன். மேன்மை பொருந்திய மாந்தர்கள் பலரையும் எனக்குத் தெரியும். நீ விரும்புவது என்னவென்று எனக்குச் சொன்னால், நீ விரும்பும் பொருளையோ மாந்தரையோ குறித்து உனக்குத் தெரியவேண்டிய விஷயங்கள் யாவற்றையும் நான் உனக்குச் சொல்வேன்.

சித்திரா

சுவாமி! நான் விரும்பும் மனிதர் நாடெங்கும் கீர்த்தி பெற்றவர்.

அருச்சுனன்

அப்படியா! தமது கீர்த்தியால் உன் மனதைக் கவர்ந்துள்ள பாக்கியவான் யார்?

சித்திரா

க்ஷத்திரிய குலத்திலே முதன்மையான அரசவம்சத்தில் உதித்து, முதன்மையாள வீரரென்று கீர்த்தி பெற்றவர்.



புதிய அழகு பெற்ற சித்திராவும்,
துறவியாக வசிக்கும் அருச்சுனனும்.

அருச்சுனன்

மாதே! கீர்த்தியென்பது ஒரு சிலரால் கட்டிவிடப் படும் கட்டுக்கதை. அது மாந்தர்களுக்குள் வாய்க்குவாய் வெகு எளிதாகப் பரவுகிறது. சூரியன் உதிக்கு முன் திடமற்ற வஸ்துவான பனி ஆகாயமெங்கும் பரவுவதை யும், சூரிய கிரணங்கள் வந்ததும் அது விரைவாக மறை வதையும் நீ பார்த்திருக்கிறுயல்லவா? அதுபோலவே, மாந்தரது கீர்த்தி ஆதாரமின்றி உண்டாக்கப்பட்டுப் பிறகு இருந்தவிடந் தெரியாமல் மறைந்துவிடுகிறது. வாய்ப் பேச்சான கீர்த்தியை நம்பி, நீ நேரில் அறியாத ஒருவருக்கு உனது ஒப்பற்ற அழகை வீணுகத் தத்தஞ் செய்யாதே.

அது போகட்டும்! நீ யாரைக் குறித்து இவ்வளவு புகழ்ச்சியாகப் பேசுகிறுய்? எனக்குச் சொல்.

சித்திரா

சுவாமி! துறவியாயுள்ள உங்களுக்குப் பிறர் புகழைக்கேட்பதில் ஏன் இவ்வளவு அசூயை? இப்பாரத நாட்டிலுள்ள அரசவம்சங்களுள் குரு வம்சமே அதிகப் பேர்பெற்றதென்பது உங்களுக்குத் தெரியாதா.

அருச்சுனன்

குருவம்சமா? சரி, மேலே சொல்?

சித்திரா

கீர்த்தி பெற்ற அவ்வம்சத்திலுதித்து ஒப்பற்ற வீர ராய் விளங்குபவரைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டதில்லையா?

அருச்சுனன்

அப்பெயரை உன் வாயிலிருந்தே நான் கேட்கவிரும்பு கிறேன்.

சித்திரா

உலகம் முழுவதையுமே ஜயிக்க வல்லவரான அருச்சுனர். அவர் அழியாப்புகழ் பெற்றவரென்று வெகுஜனங்களிடமிருந்து கேள்விப்பட்டு, அவரை என் மனத்தில் வைத்து எப்போதும் தியானித்துக் கொண்டிருக்கிறேன்.

(அருச்சுனன் திடுக்கிட்டதைக்கண்டு) துறவியாரே! ஏன் திகைக்கிறீர்? நான் மனத்திற் கொண்டிருக்கும் வீரரைப் பற்றி, நான் கேள்விப் பட்டதெல்லாம் பொய் வதந்தியா? அப்படியாயின் நீங்கள் உண்மையைச் சொல்லி விடுங்கள். நான் என் மனத்திற் பக்தியோடு வைத்திருக்கும் விக்கிரஹத்தை இப்பொழுதே எடுத்துக் கீழே எறிந்து விடுகிறேன்.

அருச்சுனன்

மாதே! அருச்சுனனது பேரும் புகழும், வீரமும் சக்தியும் மெய்யாயினுஞ்சரி, பொய்யாயினுஞ்சரி, அவரை உன் மனத்திலிருந்து நீக்கிவிட வேண்டாமென்பது எனது பிரார்த்தனை.

ஏனெனில் இப்போது உன்னை வணங்கும் நானே அந்த அருச்சுனன்.

சித்திரா

இதென்ன விந்தை! நீங்களா அருச்சுனர்?

அருச்சுனன்

ஆம். நானே அருச்சுனன். உன்னைக் கண்டதும் உன்னிடங்காதல்கொண்டேன். என்னைப் புறக்கணிக்காமல் ஏற்றுக் கொள்ளும்படி உன்னை வேண்டுகிறேன்.

சித்திரா

அருச்சுனர் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிரம்மசரிய விரதம் கைக்கொண்டிருக்கிறு ரென்பது உண்மையன்றோ?

அருச்சுனன்

விரதம் எடுத்துக் கொண்டேனென்பது பொய்யல்ல, மெய்யே. ஆனுல் சந்திரன் உதித்ததும் இருள்போய் விடுகிறமாதிரி, நீ என்கண்முன் தோன்றினதும் எனது விரதமெல்லாம் பறந்து போயிற்று.

சித்திரா

இது என்ன வெட்கக்கேடு! நீர் பிரதிஞ்ஞைசெய்து கைக்கொண்ட துறவறத்தை சூரியகிரணங்களாற் கரைந்துபோகும் மூடுபனிக்கு ஒப்பிடுகிறீரே! உமது துறவறத்தைக் கைவிடும்படி என்னிடத்தில் நீர் கண்டது

என்ன? எனது வெளியழகைக் கண்டு ஏன் சத்தியந் தவறி நடக்கவிரும்புகிறீர்?

நீர் இப்போது எனது தேகத்தின் வனப்பைக் கண்டு மயங்குகிறீர்! இந்தத் தேகம் உண்மையான நானன்று என்பதை நான் அறிந்துளேன். நீரேன் இதை அறிய வில்லை? ஆடவர்கள் ஸ்திரீகளின் தேகவனப்பில் மோகங் கொள்வது மெய்க்காதலன்று. ஸ்திரீகளது ஆத்மலக்ஷ ணங்களைக் கொஞ்சமேனும் கவனியாமல், மேனியழகுக் காகவே அவர்களை விரும்புவதுதானா, ஆடவர்கள் ஸ்திரீ களிடத்தில் வைத்திருக்கும் மதிப்பு? இதுதானா அவர் களுக்குக் காண்பிக்கும் மரியாதை? நிலையற்ற தேகத்தின் அழகில் மயங்கி, நிலையான ஆத்மாவின் பிரகாசத்தைக் காண்பதற்குக் கண்ணில்லாமலிருப்பது எவ்வளவு கேவ லம்!

உம்மைப்பற்றி ஒரு சுத்தவீரரென்றும், மகா புருஷ ரென்றும் நாடெங்கும் பரவியிருக்கும் புகழ் பொய் யென்பதை நான் இப்போது நேரிற் கண்டுகொண்டேன்.

அருச்சுனன்

எனது புகழும் பராக்கிரமும் பயனற்றவையென்பது எனக்கு இப்போது புலப்படுகிறது. நான் செய்திருக்கும் அரிய வீரச் செயல்களும், அடைந்த பெரும் புகழும் எனக்கு இப்போது ஒரு சொப்பனம் போலத் தோன்று கின்றன.

மாதே! நீ பரிபூரண லக்ஷணங்களைப்படைத்த ஓர் ஒப் பற்ற ஸ்திரீ. உனக்கு ஈடென்று சொல்லும்படியான

இரண்டாவது ஸ்திரீ இவ்வுலகிலேயேயில்லை. நீ இவ் வுலகத்து ஐசுவரியங்களுக்கெல்லாம் மேலான ஐசுவரியம். உன்னை அடைவதே நான் இப்பிறப்பில் அடையக் கூடிய மேலான பலன்.

நான் உன்னை அறிந்துகொள்ளாமல் விரும்புகிறே னென்று நீ சொல்கிருயே! நீ சொல்வதுசரியன்று. ஏனெ னில், நீ மற்ற ஸ்திரீகளைப்போன்றவளன்று. அவர்களைச் சிறிது சிறிதாக நாளடைவில் தான் அறிந்துகொள்ளமுடி யும். ஆனால் உன்னை ஒரு கணம் பார்த்ததே ஒரு பரிபூர ணத்தைக் கற்பகோடி காலத்துக்குப் பார்த்ததாகும். உனது அருமை பெருமைகள் எனக்கு ஒரு கணத்தில் விளங்கிவிட்டன. ஆகையால் உன்னை அறிந்துகொண்டே மனப்பூர்வமாய் விரும்புகிறேனென்று நீ நம்பலாம்.

சித்திரா

அருச்சுனரே! என்னிடத்தில் நீர் இப்போது காண் பது ஒரு தேவதையால் அளிக்கப்பட்ட மாய உருவம். இதைநம்பி, உமது மகத்தான பிரதிஞ்ஞைகளைக் கைவிடா தேயும்,...

போம், போம், ஐயா!

## காட்சி 3

[காட்டில் ஒரு தனியிடத்தில் காலை வேளையில் சித்திரா தனது இஷ்ட தேவதைகளைக் காண வந்திருக்கிருள்.]

சித்திரா

(தனக்குள்) நான் செய்த மனவுறுதியை என்னுல் காப்பாற்ற முடியாமற் போய்விட்டதே! ஆனுல் அவரது காதற்பார்வையும், இனியவாய்மொழிகளும், தேகத்துடிப்பும் அவருக்கிருந்த அதி தீவிரமான காதலை உணர்த்தின. அதையெல்லாம் நான் பார்த்துவிட்டு, அவரை ஒரே பிடிவாதமாய்ப் புறக்கணிப்பதற்கு எனக்கு எவ்வாறு மனம் வரும்?

(மன்மதனும் வஸந்தனும் பிரவேசம்.)

காதற்கடவுளே! இதென்ன புதுமை! என்னுல் தாங்கமுடியாத ஒரு வெப்பம் என் உடலைத் தகிக்கின்றதே! என் கைகளால் எதைத் தொட்டபோதிலும், அது உஷ்ணமாக இருக்கிறதே!

மன்மதன்

பெண்ணே! நேற்றிரவு நடந்த சம்பவங்களைச் சொல்.

சித்திரா

சுவாமி! நேற்று அந்திப்பொழுதில் நான் வெளியே போய்ப் புற்றரையின்மீது, மலர்கள் உதிர்ந்து மிருதுவா

யிருந்த ஓரிடத்தில், காற்ருடப்படுத்துகொண்டேன். அப்போது அன்று பகலில் அருச்சுனர் என்னைப் பல தடவை அணுகி, என் வனப்பைப் புகழ்ந்து உரைத்த ஆசை மொழிகள் ஒவ்வொன்ருய் என் நினைவிற்கு வரவே, எனது மனம் இன்பவெள்ளத்தில் ஆழ்ந்துவிட்டது. அச்சமயம் எனது பூர்வ சரித்திரஞாபகங்களெல்லாம் என் மனத்தை விட்டு அகன்றுவிட்டன.

எனது மனோநிலை, தற்போதிய இன்பத்தில் மகிழ்கின்ற ஒரு மலரின் நிலையை ஒத்திருந்தது என்னலாம். தேனீக்கள் ஒருமலரின் அழகில் ஈடுபட்டு, அதற்கு இன்பமளிப்பதற்காக, காதுக்கினிய ரீங்காரங்கள் செய்யும் போது, அம்மலர் சிறிது காலம் சுகித்திருந்து, பிறகு தலை வணங்கிக் கீழே விழுந்துவிடுகிறது. மலரின் வாழ்வு சொற்ப நேரத்து வாழ்வானபோதிலும், உள்ளவரை குறைவற்ற இன்ப வாழ்வாக இருக்கிறது. அதுமாதிரியே நான் ஆழ்ந்திருந்த மனோநிலை சொற்ப நேரத்ததாயிருந்தாலும், ஓர் இன்ப மயமான ஆனந்த அனுபவமாக இருந்தது.

வஸந்தன்

நியாயந்தானே! மலர்கள் ஒரே காலைக்குள் பூத்துப் பிரகாசித்து விளங்கவில்லையா? அது போலவே, மாந்தர்கள் எல்லையற்ற ஆனந்தத்தையும் வாழ்வின் உயரிய சிறப்பையும் ஒரு சிறிதுகாலஅளவுக்குள்ளேயே பெற்று விளங்கலாம்.

## மன்மதன்

சிறந்த கவியின் செய்யுள், சொற்களின் அளவில் குறுகியதா யிருந்தபோதிலும், அளவற்ற அர்த்தத்தைக் கொடுக்கிறதுபோல, மாந்தர்களின் வாழ்க்கையிலுண்டாகும் சில விசேஷ அனுபவங்கள் சொற்பகாலத்துக்குள்ளேயே எல்லையில்லா ஆனந்தத்தை அளிக்குந் தன்மையையுடையவை.

## சித்திரா

தென்றல் காற்று வெகு சுகமாக வீசியதால். நான் புற்றரையின்மேற் படுத்தபடியே தூங்கிப்போய் விட்டேன். மேலேயிருந்து மாலதிக்கொடியின் மிருதுவான புஷ்பங்கள் எனது கூந்தல், மார்பு, கை கால்களின்மேல் விழுந்துகொண்டிருந்தன.

நான் அயர்ந்த நித்திரையிலிருந்தபோது, திடீரென யாரோ ஒருவர் என்னருகே வந்து, என்னைக் கூர்ந்து பார்த்து, மெதுவாய்த் தொட்டாற்போல இருந்தது. நான் திடுக்கிட்டு விழித்துப் பார்த்தபோது, என் முன்னால் துறவி நின்றுகொண்டிருப்பதைக் கண்டேன். வானத்தில் சந்திரன் இருந்த இடத்திலிருந்து, இரவில் வெகு நேரம் ஆகிவிட்டதென்று அறிந்தேன். சந்திரன் மரங்களின் இலைகளுக்கிடையில் எனது தேகத்தின்மேல் ஒளிவீசிற்று. மலர்களின் நறுமணம் காற்றில் நிரம்பியிருந்தது. இராக்காலத்தில் சத்தமிடும் சிள்வண்டுகளின் ஒலியைத்தவிர மற்றப்படி நிச்சப்தம் குடிகொண்டிருந்தது. அச்சமயம் காற்று அடங்கியிருந்தபடியால் மரங்களின் பிம்பங்கள் ஏரியில் அசைவற்றுக் காணப்பட்டன.

அந்த நிர்மலமான வேளையில், அருச்சுனர் துறவிக்குரிய தண்டு ஒன்றைக் கையிற் பிடித்துக் கம்பீரமாக என்னெதிரில் நிற்கும் காட்சியை நான் கண்டேன். நித்திரையிலிருந்து கண்விழித்த எனக்கு ஏதோ ஒரு புதிய உலகத்தில் இருப்பதுபோலத் தோன்றிற்று. நான் மெய்ம்மறந்திருந்ததால், ஸ்திரீகளுக்கு இயற்கையாகவுள்ள நாணமென்ற குணம் அத்தருணத்தில் என்னைவிட்டு அகன்றுவிட்டது. நான் செய்துகொண்டிருந்த மனவுறுதியை எப்படியோ மறந்துவிட்டேன். அருச்சுனர் என்னை "பிரியே! எனது ஆருயிரே" என்று அழைத்தபோது, என் மனத்தில் ஆழ்ந்துகிடந்த காதலுணர்ச்சிகள் எப்படியோ என் மனது முழுவதையும் வசப்படுத்திக் கொண்டன. நான் முன் பின் யோசனைகள் ஏதுமில்லாமல், ஓர் உற்சாகத்தில் அருச்சுனரிடம், "காதலரே! எனது உடலும் ஆவியும் உமக்கே அளிக்கிறேன்" என்று விடையளித்துவிட்டேன்.

ஆனால் இன்று காலையில் நான் துயில் நீங்கி யெழுந்தபோது என் மனோநிலை மாறிவிட்டது. நான் அருச்சுனரது வேண்டுகோளுக்கு இணங்கினதை நினைத்து நினைத்து, என் மனச்சமாதானத்தை இழந்தேன். நான் செய்தது சரியல்லவோ வென்ற ஐயம் உண்டாயிற்று. காட்டில் சஞ்சரிக்கும் மான் தனது நிழலையே கண்டு அஞ்சித் துள்ளி ஓடுவதுபோல், நான் விரைந்தோடி ஒரு தனியான இடத்திற்கு வந்து, உட்கார்ந்து என் முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டு, அழுது எனது மன உணர்ச்சிகளை வெளிப்படுத்த முயன்றேன். ஆனால் என் கண்களில் ஒரு துளி கண்ணீர்கூட வரவில்லை.

மன்மதன்

பெண்ணே! ஏன் அனுவசியமாய் உன் மனத்தைக் கஷ்டப்படுத்திக் கொள்கிருய்? நான் தேவலோகத்திலிருக்கும் அமிருதத்தில் ஒரு கலசம் நிறையக் கொண்டு வந்து உன் கையிற் கொடுத்திருக்க, நீ ஏன் இன்னும் திருப்தி யடையாமலிருக்கிருய்?

சித்திரா

[மனக்கசப்புடன்] நீங்கள் எனக்களித்த மதுரமான பானத்தை நான் இன்பமாய்ப் பருகாதபடி, என்மனத்தில் உண்டான ஓர் ஐயம் என்னைத் தடுத்துவிட்டதே!

எனக்கு இப்போது உண்டாயிருக்கும் மனக்கவலையைக் கேளுங்கள். என் காதலர் எனக்கு இப்போதுள்ள அழகைக்கண்டு என்னைக் காதலிக்கிருர். அவருடைய காதல் எனக்கும் இப்போது இன்பமாய்த்தான் இருக்கிறது. ஆனல் மலரிலிருந்து இதழ்கள் ஒவ்வொன்ருய் உதிர்ந்து விழுவதுபோல, என் தேகத்திலிருந்து சௌந்தரியங்கள் நீங்கிவிடுமே! அப்போது எனது அழகிழந்த நிலைமையில், என் கணவரது காதலையும் இழந்து, நான் இரவும் பகலும் துக்கித்துக்கொண்டே காலங்கழிக்க வேண்டிவருமோ, என்று வருங்காலத்தைப்பற்றிய ஏக்கம் எனது தற்காலச் சுகத்தையே கெடுக்கின்றது.

மன்மதன்

இதென்ன விபரீதம்! உனக்கு இன்பத்தைத் தரவேண்டுமென்று எண்ணி நான் உனக்களித்த சுபதினத்தை நீ பூரணமாய்ப் பயன் படுத்திக் கொள்ள வில்லையே! நீ

இன்பக் கடலில் உல்லாச யாத்திரை செய்யவேண்டு மென்று கருதி, நீ இருக்கும் கரையோரமாக, உன்னை ஏற்றிக்கொள்வதற்காக ஓர் இன்பப்படகை அனுப்பித் தேன். ஆனால் உனது மனக்குழப்பத்தாலுண்டான அலை கள் அப்படகைக் கரையிலிருந்து தூரத்திற்குத் தள்ளி விட்டனவே!

சித்திரா

நேற்றிரவு வானுலகு என்னை அணுகி வருவதைக் கண்டு, அது என் கைக்கெட்டி விட்டதாகவே எண்ணி மகிழ்ச்சியடைந்தேன். உண்மையில் அது என் கைக்கு எட்டவில்லை. இன்று காலை விழித்தெழுந்ததும், நான் நேற்றிரவு அனுபவித்தது ஒரு கனவுபோலத் தோன்று கிறது.

என் காதலருக்கு என்னிடம் இருக்கும் பிரியம் குறையாதிருப்பதற்கு, நான் எனது தேகத்தைத் தினந்தோ றும் அலங்கரித்து என் காதலரிடம் அனுப்பி, அதனிடத் தில் அவர் மகிழ்ச்சி கொள்வதைப் பார்த்து, நான் திருப்தி யடையவேண்டுமே! இதென்ன வேலை? தேவதைகளே! நீங்கள் எனக்களித்த அழகுவரத்தை நீங்களே திரும்ப வாங்கிக் கொள்ளுங்கள்.

மன்மதன்

உனக்கு இப்போதுள்ள திவ்விய அழகை வேண்டா மென்று நீ தள்ளிவிடுவாயானால், உன் காதலர்முன் எப்படி உன்னால் நிற்கமுடியும்? உன் காதலர் உன்னோடு ஒருநாள் சுகித்திருப்பதற்குள்ளேயே, அவருக்கு ஏமாற்

றத்தை உண்டாக்குவது ஒரு கொடுமையாகாதா? மேலும், உன் காதலர் நேற்றெல்லாம் உன்னைத் திவ்விய மான அழகுடன் பார்த்துவிட்டு, இன்று திடீரென உன்னை அழகின்றிப் பார்ப்பதால், அவருக்கு உன் மீது கடுங்கோபம் வராதா?

சித்திர

மேனியழ கென்ற வெளி வேஷத்தால் அவரது காதலை யடைவதை விட, என்னை உள்ளபடியே காண் பித்து அவரது கோபத்துக்கு ஆளாவதே மேலானது. அத ளுல் அவர் என்னை அலட்சியஞ் செய்தாலும், அவர் என்னை வெறுத்து என்மனம் உடைந்து சிதறினுலும், நான் சகித்துக் கொள்வேன்.

வஸந்தன்

பெண்ணே! நான்சொல்வதைக் கேள், தாவரங்கள் மலர்ப்பருவத்தில் அழகிய மலர்களால் பிரகாசிக்கின்றன. பிறகு அவைகள் கனிப்பருவத்தில் நிலையான பயனை அளிக்கும் கனிகளைச் சொரிகின்றன. மலர்ப்பருவத்தின் நற்பயனுகத் தான் கனிப்பருவம் உண்டாகிறது. மலர்ப் பருவமும் வாழ்க்கைக்கு முக்கியமானதே. பூக்கிற காலத் திற் பூத்து விளங்கினுல் காய்க்கிறகாலத்தில் தானே காய்க்கும்.

நீயும் இப்போதுள்ள யுவதிப்பருவத்தில் வெளியழ கால் சோபித்து, பிறகு தானுகவே வரும் மாதர்ப்பருவத் தில், உனது நிலையான குணங்களால் விளங்குவாய். அதற்குள் உன் கணவரும் வெளியழகில் திகட்டிப்போய்

உன் உள்ளமுகை நாடுவார். அப்போது அவர் உனது சிறந்த குணங்களைக்கண்டு மகிழ்ந்து, உன்னை உள்ள படியே அறிந்து, உன்னிடத்தில் நிலையான பிரீதியை அடைவார். குழந்தாய்! அதுவரையில் உங்களது இளங் காதல் விழாவை இன்பமாய் நடத்து.

## காட்சி 4

[காட்டினிடையிலுள்ள ஒரு தனியான வீட்டில், அருச்சுனனும் சித்திராவும் ஓராண்டு காலம் வாழ்கிறார்கள்.]

(சித்திரா மலர்மாலை தொடுக்கிறாள்.)

### சித்திரா

நாதா! கண்கொட்டாமல் பார்க்கிறீர்களே! என்ன விசேஷத்தைக் கண்டு இப்படிப் பார்க்கிறீர்கள்?

### அருச்சுனன்

பிரியே! நீ மாலை தொடுக்கிற அழகு எனக்கு ஓர் அற்புதக் காட்சியாக இருக்கிறது. உனது பூப்போன்ற கைகளின் வேலைத்திறமை மெச்சத்தக்கது. கைவிரல்கள் மலர்களையெடுத்து எவ்வளவு நுட்பமாயும் இலகுவாயும் கோர்க்கின்றன. உன் விரல்கள் வேலை செய்யும்போது, அவற்றின் திறமையும் சௌந்தரியமும் ஒன்று கூடித் தாண்டவமாடுகின்றன. உனது கைப்பயிற்சியின் திறமையைக்கண்டு களிப்படைந்த என் மனம், என்னென்னவோ எண்ணங்களில் ஆழ்ந்துவிட்டது.

### சித்திரா

நாதா! உங்கள் மனத்தில் உண்டான எண்ணங்கள் என்ன? சொல்லுங்கள்.

அருச்சுனன்

நீ தொடுப்பது ஒரு மலர் மாலை மட்டுமன்று. உன குணத்தின் இனிமையாலும், கலைத்தேர்ச்சி கைப்பயிற்சி களாலும், நீ எனது வனவாசத்தையே ஓர் இன்பமாலை யாகப் புனைகிருய். எனது ஊருக்கும் வீட்டுக்கும் உன்னை அழைத்துச் சென்றதும், அங்கே நீ எனக்குச் சூட்டப் போகிற இன்பமாலை எப்படி அழிவற்றதும் சிறப்பானது மாக இருக்குமென்பதை எண்ணி, நான் மகிழ்ச்சியடை கிறேன்.

சித்திரா

நாதா! நமது காதல் வீட்டு வாழ்க்கைக்காக உண் டானதல்லவே!

அருச்சுனன்

நீ சொல்வது எனக்கு விளங்கவில்லையே!

சித்திரா

நாதா! பலம் பொருந்தியதும், நிலைத்துப் பயன்படுந் தன்மை உள்ளதும் எதுவோ, அதை நீங்கள் ஊருக்குக் கொண்டுபோய்க் குடும்பத்தில் ஸ்தாபியுங்கள். காண்ப தற்கு அழகாயும் முகருவதற்கு மணமாயும் இருக்கும் மலரைப்பறித்து, அரண்மனையின் கடினமான கல்தளத் தில் எறிவதால் உண்டாகும் பயன்யாது?

செடியிலே இருந்து விளங்கும் மலர், தானுள்ளவரை யில் அழகையும் மணத்தையும் வீசிக்கொண்டிருக்கும். காலமானதும் அது தானே அனுயாசமாக விழுந்துவிடும். இதுவே அம்மலரின் வாழ்க்கைக்குச் சிறந்த முடிவாகும்.

அருக்சுனன்

நமது காதல் ஒரு மலரை ஒத்ததென்று சொல்கிருய்?

சித்திரா

ஆம். நமது காதல் வாழ்க்கை ஒரு மலரின் வாழ்வை ஒத்ததுதான். ஆனல் அதற்காகத்துக்கிப்பானேன்? வினோத நாட்களுக்காக ஏற்பட்ட காதலின்பம், அந்நாட்களான தும் முடிவுபெறவேண்டியதுதானே? தனக்கு ஏற்பட்ட காலத்தின் முடிவில் வெளியேபோகின்ற இன்பத்தைக் கட்டிப் பிடித்து நிறுத்திவைத்தால், அது துன்பமாக மாறுகிறது.

இவ்வின்பம் உள்ளவரையில், அதைப் பூரணமாய் அனுபவியுங்கள். அதற்கு இயற்கையான முடிவு வந்ததும் அதை விட்டு விடுங்கள், நமது விருப்பங்கள் ஒவ்வொன்றும் ஆரம்பத்தில் தீவிரமாக இருந்தபோதிலும் அதற்குரிய இன்பங்களைப் பெற்று அனுபவித்ததும் திருப்தியடைந்துவிடும்...

அது இருக்கட்டும். இப்போது பகற்பொழுது முடிந்து விட்டது. உங்களுக்காக நான் தொடுத்த மாலையும் கட்டி யாயிற்று. நீங்கள் அதைப் போட்டுக் கொள்ளுங்கள். எனக்கும் களைப்பாய் இருக்கிறது. நாமிருவரும் இன்பமாய்க் காலங்கழிப்போம், வாருங்கள்.

அருச்சுனன்

பிரியே, கோவில் மணியின் ஒலி கேட்கிறது. தூரத்திலுள்ள ஏதோ ஒரு கிராமக் கோவிலில் அந்தி கால

பூஜைக்காக அடிக்கும் மணியின் ஒலி, நிச்சப்தமாய் இருக்கின்ற மரங்களைத் தாண்டி, நமது காதுக்கு வருகிறது. கடவுளைத் தியானித்துவிட்டு இன்பமாய் இருப்போம்.

## காட்சி 5

[இடம்—தேவலோகம்]

வஸந்தன்

மதனரே! உங்களது வேகத்தை அனுசரித்து, உங்களைத் தொடர்ந்து வருவது எனக்குக் கடினமான வேலையாயிருக்கிறது. நீங்கள் காதல் என்ற சுடரை இரு காதலர்களின் மனங்களிலும் மூட்டியிருக்கிறீர்கள். அந்தச் சுடர் அணையாமலும், சாம்பலால் மூடிப்போகாமலும் எப்போதும் கொழுந்துவிட்டு விளங்குவதற்கு, நான் ஓயாமல் விசிறிக்கொண்டே யிருக்கவேண்டி யிருக்கிறது. நான் சற்றுக் கண்ணைமூடினுல், அவர்களுடைய உற்சாகம் மங்கிவிடுகிறது. நான் கண்ணை விழித்ததும், அவர்களது களைத்த உற்சாகத்தைத் தூண்டிவிடுகிறேன். இவ்வாறு எவ்வளவு காலந்தான் என்னுல் செய்யமுடியும்?

மன்மதன்

வஸந்தா! உனது விளையாட்டுச் சேஷ்டைகள் எனக்குத் தெரிந்தவையே. சதாகாலம் பருவ நிலையை மாற்றிக்கொண்டே இருக்கிறுய். உனக்கு நிலையான புத்தியில்லை.

ஒரு பருவத்தில் வெகு பிரயத்தனப்பட்டு உண்டாக்கினதை; அடுத்த பருவம் வந்ததும் ஒரு நொடிப்பொழுதில் அழித்து விடுகிறாய். இவ்விஷயத்தில் உனக்கு யாரிடத்திலும் பரிதாபமேயில்லை.

இக்காதலர்கள் விஷயத்தில் நாம் செய்யவேண்டிய வேலை கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. காதலின்ப நாட்கள் சிறகு கட்டிப் பறக்குந் தன்மையை உடையவை இக்காதலர்களது இன்ப ஆண்டு முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது. இப்போது அவர்கள் இன்பத்தின் உச்சநிலையில் வாழ்கின்றனர். இன்னுஞ் சிறிதுகாலம் அவர்களை உற்சாகப் படுத்திவிட்டால், அதற்குமேல் நமக்கு வேலையிராது.

## காட்சி 6

[இடம்— காட்டினிடையிலுள்ள தனி வீடு]

அருச்சுனன்

(தனக்குள்) இந்நாட்டில் வந்ததுமுதல் எனக்குண்டான சம்பவங்கள் ஒரு கனவுபோலத் தோன்றுகின்றன, ஆயினும் ஒரு விலையற்ற மாணிக்கம் எனக்குக் கிடைத்திருப்பதை நான் பிரத்தியட்சமாகக் காண்கிறேன், அம் மாணிக்கத்தை வைப்பதற்கு ஒரு நகைப்பெட்டி என் கையிலில்லை. அழகாக மாலையிற் கோர்த்து அணிவதற்குப் பொன்மாலை கைவசமில்லை. கிடைத்துள்ள பொருள் ஒரு மாணிக்கமானதால் அதை எறிந்துவிட மனம் வரவில்லை.

அன்றி, க்ஷத்திரியர்க்குரிய வீரச்செயல்களைச் செய்யாமலிருப்பதால், எனது வலதுபுஜம் தனது சக்தியையே மறந்து விடும் போலிருக்கிறது.

(சித்திரா பிரவேசம்)

சித்திரா

நாதா! என்ன யோசனை செய்துகொண்டிருக்கிறீர்கள்?

அருச்சுனன்

இன்று வேட்டையாடப் போகவேண்டுமென்ற அவா எனது மனத்தில் உண்டாயிருக்கிறது. மழை கொட்டு

கொட்டெனக்கொட்டி வெள்ளம் பெருகி மலைச்சரிவு களில் காட்டருவிகள் வேகமாக ஓடுவதைப் பார். காட்டின் மரங்களைக் கனத்த மேகங்கள் மூடிக்கொண்டிருப்பதைப் பார். இதுவே காட்டில் வேட்டையாடுவதற்குத் தகுந்த நாள்! இம்மாதிரியான நாட்களில் நாங்கள் ஐந்து அண்ணன் தம்பிமார்களும் சித்திரகா என்ற காட்டிற்குப் போய், உற்சாகத்துடன் மிருகங்களை வேட்டையாடுவது வழக்கம். அந்தக்காலம் யாதொருவிதமான கவலைகளு மின்றி நாங்கள் உற்சாகமாய்க் கழித்த நாட்கள். காட்டில் மயில்களின் கூச்சல்களைக் கேட்டு அவைகளின் இருப்பிடங்களை நாங்கள் அறிந்துகொள்வோம். மழை கொட்டும் சத்தத்திலும், நீர் வீழ்ச்சிகளின் சத்தத்திலும், நாங்கள் வருகின்ற சத்தம் மான்களுக்குக் கேட்காது. அவைகளுக்குத் தெரியாமல் அவைகளை அணுகி அம்புகளை எய்வோம். சிறுத்தைப் புலிகள் தமது மறைவிடங்களி லிருந்து வெளியே வரும். அப்போது ஈரபூமியின் மேல் அவைகளின் காற்சுவடுகளை நாங்கள் கண்டு, தொடர்ந்து செல்லவே, அவைகள் எங்கள் அம்புகளுக்கு இரையாகும்.

எங்கள் வேட்டை முடிந்த பின், அதிவேகமாய் ஓடும் காட்டாறுகளை நீந்தி, வீட்டுக்குத் திரும்புவோம். அதே விதமாக இன்று வேட்டையாட வேண்டுமென்ற அவா எனக்கு உண்டாயிருக்கிறது.

சித்திரா

காட்டிற் புகுந்து மிருகவேட்டை யாடுவதற்கு இது தருணமன்று. இப்போது எதைத் தொடர்ந்து வேட்டை யாடுகிறீர்களோ, அது உங்களது வசமாய்விட்டதா?

இல்லையே! நாமிருவரும் இப்போது காதலென்ற மானை யல்லவா தேடிப்பிடிக்க முயலுகிறோம்? அம்மான் இன்னும் நமது கையிற் பிடிபடாமலே தப்பி ஓடிக்கொண் டிருக்கிறது. அம்மானைப் பிடித்தாகுமுன், வேறு ஞாபகங் கள் எதற்காக?

அருச்சுனன்

நீ சொல்வது சரி. இன்று வேட்டைக்குப் போகும் உத்தேசத்தை விட்டுவிடுகிறேன். ஆனால் உன் விஷய மென்ன? உனக்கு வீடும் பெற்றோரும் உற்றாரும் இல்லையா? நீ இக்காட்டிற்கு வருவதற்கு முன், உனது அன்பினாலும் இதமான பணிவிடைகளாலும் பிரீதி யடைந்து, இப்போது உனது பிரிவாற்றாமையால் மன வருத்தப்படுகிறவர்கள் இல்லையா? உனது வரவை ஆவலு டன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பவர்கள் யாருமில்லையா?

சித்திரா

நாதா! எவ்வித சிந்தனையுமில்லாமல் இன்பத்தை அனுபவிக்கும் காலம் முடிந்துபோய்விட்டதா? எனது பூர்வசரித்திரத்தைப்பற்றி ஏன் இந்தக் கேள்விகள்? நீங்கள் என்னை எதுவாகக் காண்கிறீர்களோ, அது மட்டுமே நான். என்னைப்பற்றித் தெரிந்துகொள்ளத் தக்க விவரம் வேறெதுவுமில்லை. எனக்கு முன்னுமில்லை, பின்னு மில்லை, என்று வைத்துக்கொள்ளுங்கள்.

ஒரு மலரின்மேல் இருக்கும் பனித்துளிக்குப் பேர் ஏது? பிறப்பேது? அது ஆகாயத்திலிருந்து விழுந்த ஏதோ ஒரு துளி. தனது லக்ஷணத்தால் சிறிதுகாலம் நமக்கு இன்பம் அளிக்கிறதேயன்றி, நாம் கேட்கக்கூடிய

கேள்விகளுக்கு விடையளிக்கிறதா? நீங்கள் காதலிக்கும் ஸ்திரீயும் அப்பனித் துளி போன்றவள் தான்.

அருச்சுனன்

உனக்கு இவ்வுலகில் எக்குடும்பத்தோடும் சம்பந்த மில்லையா? நீ தேவலோக வாசியான ஒரு தேவதையின் கையிலிருந்து தற்செயலாய் நழுவிப் பூமியில் விழுந்த ஒரு ஜீவ அணுவா?

சித்திரா

ஆம்.

அருச்சுனன்

அதனால்தான் இன்பமளிக்கும் உன் சேர்க்கையை என்றைக்கு இழப்பேனோ, என்ற கவலை எனக்கு இருக் கிறது. இவ்வாழ்வில் எனக்கு எவ்வளவு இன்பமிருந்தும், பூரணமான திருப்தி ஏற்படவில்லை. என் மனத்துக்கு அமைதியும் உண்டாகவில்லை.

நீ இக்காட்டைவிட்டு ஊருக்கு வந்து, குடும்பத்தி லிருந்து, பேரும் புகழும் அடையவேண்டுமென்பது எனது கோரிக்கை. என்னைவிட்டு ஒரு நாளும் பிரியாதபடி, உன்னை எனது பக்கத்திலேயே எப்போதும் வைத்துக்கொண்டு, நாமிருவரும் இணைபிரியாத காதலர்களாய் இன்பவாழ்வை வாழவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

சித்திரா

மேகத்தின் வர்ணங்களையோ, அலைகளின் நர்த்தனத் தையோ, பூக்களின் மணத்தையோ பிடித்து நிறுத்தி வைத்துக்கொள்ள முயலுவது வீண் முயற்சியாகும்.

அருச்சுனன்

நமது வருங்காலத்தைப்பற்றி, இம்மாதிரியான வெறும் வார்த்தைகளால் என்னைத் திருப்திசெய்துவிடலாமென்று எண்ணாதே.

பிராணநாயகி! நமது தற்கால வாழ்வு எவ்வளவு ருசிகரமாக இருந்தபோதிலும், ஒரு மாயம்போல மறைந்துவிடுமென்று எனக்கு இப்போது தோன்றுகிறது. ஆகையால் தற்கால இன்பத்தையன்றி, நிலைத்து நிற்கும்படியான இன்பத்தை என் மனம் இப்போது நாடுகிறது. சுகங்களில் மட்டுமேயன்றி கஷ்டங்களிலுங்கூட எனக்குப் பயன்படக் கூடியது எதுவோ அதையே நான் உன்னிடத்தில் நிலையாக அபேட்சிக்கிறேன்.

சித்திரா

பிராணநாதா! இந்த ஆண்டு இன்னும் முடியவில்லை. இதற்குள்ளேயே இவ்வாழ்வில் உங்களுக்கு மனக்களைப்பு உண்டாகிவிட்டதா? கடவுள் ஒவ்வொருவிதமான அனுபவத்திற்கும் ஒருகால வரையறை ஏற்படுத்தியிருக்கிறார். வஸந்த காலத்தில் விளங்கும் மலர்கள் அக்கால வரையறைக்குள் தம்மிடத்திலுள்ள சிறந்த பொருள்களைத் தேனீக்களுக்கு அளித்துவிட்டுப் பிறகு வாடி விழுகின்றன.

அதுபோலவே, நமது ஜீவிய தசையில் நாம் இக்காலத்தில் அனுபவிக்கும் இன்பங்களுக்கு இயற்கையாகவே ஒரு முடிவு ஏற்படும். அதுவரை இக்காலத்துக்குரிய இன்ப அனுபவங்களை நாம் குறைவற அனுபவிப்பதே நியாயம்.

## காட்சி 7

[இடம் - காட்டில் ஓரிடம்.]

மன்மதன்

சித்திரா! இன்றிரவோடு உனது யுவதிப்பருவம் முடிவடைகிறது.

வஸந்தன்

நாளையதினம் உனது தேகத்திலிருக்கும் சௌந்தரியங்கள் உன்னிடமிருந்து நீங்கி வஸந்த பருவத்தின் அளவற்ற சௌந்தரியங்களுடன் ஒன்று சேர்ந்துவிடும். புதிது புதிதாகக் கணக்கற்ற அசோக இளந்தளிர்களிலும், நூற்றுக்கணக்கான மெல்லிய மலர்களிலும் உனது அழகு பரவிவிளங்கும்.

சித்திரா

தேவதைகளே! இந்தக் கடைசி தினத்தில் எனது அழகு இதுவரையிலிருந்ததைவிட அதிக விசேஷமாகப் பிரகாசிக்கும்படி அருள் புரியவேண்டும்.

மன்மதன்

அப்படியே ஆகட்டும்! இன்று உனதழகின் சுடர் வெகு பிரகாசத்துடன் விளங்கும்.

## காட்சி 8

[இடம் - காட்டினிடையிலுள்ள வீடு.]

(கிராமவாசிகள் பிரவேசம்)

ஒரு கிராமவாசி

(மற்றவர்களைப் பார்த்து) இந்த ஆபத்துக்காலத்தில், நம்மை யார் காப்பாற்றப் போகிறார்கள்?

அருச்சுனன்

சிநேகிதர்களே! இப்போது உங்களுக்கு நேரிட்டிருக்கும் ஆபத்து யாது?

கிராமவாசி

ஐயா, வடக்கேயுள்ள மலைகளிலிருந்து கொள்ளைக்காரர்கள் இந்நாட்டை நோக்கி வருகிறார்களாம். அவர்கள் நாட்டிற்குள் வந்து, எங்கள் கிராமங்களை நாசமாக்கி விடுவார்களோ என்று நாங்கள் பயப்படுகிறோம்.

அருச்சுனன்

இந்நாட்டு எல்லைப்புறங்களைப் பாதுகாக்கும் வீரர்கள் யாருமில்லையா?

கிராமவாசி

எங்கள் நாட்டு அரசியான சித்திராவினிடத்தில் துஷ்டர்களுக்கெல்லாம் நடுக்கம். எங்கள் அரசி ஊரிலிருந்த

வரையில் துஷ்டனெவனும் தலையைக் காட்டவில்லை. எங்களரசியின் பாதுகாப்பில், எங்களுக்கு நீண்ட ஆயுட் காலத்தின் இறுதியில் இயற்கையாய் வருகிற மரணத்தைத் தவிர, வேறு எவ்விதத்துன்பமும் உண்டானதில்லை. ஆனால் எங்களரசி ஸ்தலயாத்திரை போயிருக்கிறார். அவர் இப்போது எங்கேயிருக்கிறாரென்பது யாருக்குந் தெரியாது.

அருச்சுனன்

அப்படியானால் இந்நாட்டின் அதிபதி ஒரு பெண் மணியா? இது என்னவிந்தை!

கிராம வாசி

ஆம், எங்களரசி ஓர் ஒப்பற்ற பெண்மணி. எங்களுக்குத்தாயும் அவரே! தந்தையும் அவரே.

(கிராமவாசிகள் தங்கள் வழியே போகிறார்கள்.)

(சித்திரா பிரவேசம்.)

சித்திரா

நாதா! இப்போது என்ன யோசித்துக் கொண்டிருக் கிறீர்கள்?

அருச்சுனன்

இந்நாட்டிற்கு அதிபதி சித்திரா என்ற ஒரு ஸ்திரீ யாமே! அவளுடைய பராக்கிரமத்தைப்பற்றி ஜனங் கள் பல அதிசயமான கதைகள் சொல்கிறார்களே! அவள் எப்படியிருப்பாளென்று நான் யோசனை செய்து பார்க் கிறேன்.

சித்திரா

அவளுக்கு என்ன பராக்கிரமம் இருந்தென்ன? அவள் அழகு படைத்த ஸ்திரீயன்று. எனது கருமையான கண்விழிகளைப்போல அழகிய விழிகள் அவளுக்குண்டா? அவளுக்குக் காட்டு மிருகங்களையும், துஷ்ட எதிரிகளையும் தவருமல் குறிவைத்து அம்பெய்யும் சாமர்த்தியமுண்டு. ஆனல் தான் விரும்பும் ஆடவரது மனத்தைக் குறி வைத்து ஜயிக்கும் சக்தி அவளுக்கு இல்லை.

அருச்சுனன்

சித்திரா ஆடவரது வீரத்தோடு, ஸ்திரீகளது அன்பையும் கருணையையும் உடையவள் என்கிருர்கள்.

சித்திரா

அவளுக்குள்ள விசேஷ குணங்களே அவளது அதிர்ஷ்டக் குறைவுக்குக் காரணம். ஒரு ஸ்திரீயானவள் வெறும் ஸ்திரீயாக இருந்து, துவளுங்கொடி ஒரு மரத்தை யண்டிச் சுற்றிக்கொள்வதுபோல, ஆடவரது மனத்தைத் தன் இன்பச் சிரிப்புக்களாலும், சோகப் பெருமூச்சுக்களாலும், கொஞ்சும் பிரிய மொழிகளாலும் சுற்றிக் கொள்வாளேயானல், அவளதுவாழ்வு இன்பவாழ்வாக ஆகிறது. சிறந்த கலைப்பயிற்சியும் அரிய பராக்கிரமமும் இருப்பதால் ஒரு ஸ்திரீக்கு என்ன பயன்?

இப்போது நீங்கள் அவளுடைய குணங்களைப்பற்றிக் கேள்விப்பட்டு இவ்வளவு ஆச்சரியப்படுகிறீர்களே! அவள் சிவன் கோவிலுக்கெதிரே உங்கள் முன்னிலையில் நின்றிருந்தால், அவளைக் கண்ணெடுத்தும் பார்த்திருக்க

மாட்டீர்கள். அப்படியிருக்க, இப்போது ஏன் சித்திரா வின் வலிமையில் உங்களது புத்தி நாடுகிறது? என் னழகைப் பார்த்துப் பார்த்து, உங்களுக்கு ஸ்திரீகளின் அழகு திகட்டிப் போய், இப்போது ஸ்திரீகளிடத்தில் குணங்களையும் வல்லமைகளையும் தேடுகிறீர்களோ?

இந்தப் பேச்செல்லாம் இப்போது எதற்கு? இந்த வெயில் வேளையில் நீங்கள் சற்றுநேரம் படுத்துக் களைப் பாறுவது நலம். வெயிலே தெரியாமல் குளுகுளுவென் றிருக்கும் ஓரிடத்தில் உங்களுக்குக் குளிர்ந்த இலைகளால் படுக்கை ஏற்பாடு செய்திருக்கிறேன். அங்கே போவோம். என்னோடு கூட வாருங்கள்.

அருச்சுனன்

பிரியே, இளைப்பாற நேரமில்லை. இன்றைக்கு எனக்கு அவசரமான வேலை இருக்கிறது.

சித்திரா

என்ன வேலை, நாதா?

அருச்சுனன்

ஒரு கொள்ளைக் கூட்டத்தார் மலையிலிருந்து இறங் கிக் கிராமங்களை நோக்கி வருவதாகக் கேள்விப்படு கிறேன், கிராமங்களைக் காப்பாற்றுவதற்கு நான் ஆயு தங்களைத் தயார் செய்துகொண்டு போகவேண்டும்.

சித்திரா

இந்நாட்டுக் கிராமங்களைப் பகைவர்களிடமிருந்து காப்பாற்றுவதைப்பற்றி உங்களுக்குக் கவலைவேண்டாம்.

சித்திரா யாத்திரைக்குப் புறப்படுமுன், வெளிநாட்டிலிருந்து இந்நாட்டிற்குட் பிரவேசிக்கும் பாதைகளிலெல்லாம் பலமான காவலாளர்களை வைத்து விட்டாள்.

அருச்சுனன்

இருந்தாலும், க்ஷத்திரியனான நான் ஏதேனும் வீரச் செயல்களைச் செய்துவிட்டு வருகிறேன். வேலையற்றிருக்கும் எனது புஜம் வீரச்செயல்களால் சிறப்படைவது உனக்கும் எனக்கும் பெருமையை அளிக்கும்.

சித்திரா

வெளியே போவதற்கு நான் அனுமதி யளிக்காவிட்டால், நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்களைத் தழுவிப் பிடித்து வைத்துக் கொண்டேனால், நீங்கள் முரட்டுத் தனமாகத் திமிறிக் கொண்டு போவீர்களா? அப்படிப் போவதானால் போங்கள். ஆனால் ஒரு விஷயம்! அறுக்கப்பட்ட கொடி பழயபடி ஒன்று சேராது. உங்களுக்கு இன்பத்திலுள்ள வேட்கை முற்றும் தணிந்து விட்டதானால், நீங்கள் குசாலாய்ப் போங்கள். இல்லாவிட்டால், நீங்கள் அனாவசியமாகச் சுகத்தை விட்டுப் போகவேண்டாம். இன்பதேவதை மாந்தர்களுடைய அதிகாரத்துக் குட்பட்டுத் தனது அருளை அளிப்பவளன்று. காற்றுள்ளபோது தூற்றிக்கொள்ளவேண்டும்.

நீங்கள் படுத்துக்கொள்ளாவிட்டாற் போகிறது. சற்றுநேரம் உட்கார்ந்து சம்பாஷிப்போம். (இருவரும் உட்காருகிறார்கள்.)

(அருச்சுனன் சிறிது நேரம் சிந்தனையிலிருப்பதைக் கண்டு) என்ன யோசனை செய்து கொண்டிருக்கிறீர்கள்? இன்னமும் சித்திராவைப் பற்றியே யோசனையா?

அருச்சுனன்

ஆம், சித்திரா என்ன பலனை அடையவேண்டி, தன்னுடன் யாரையும் அழைத்துக் கொள்ளாமல், தனியே ஸ்தல யாத்திரை போயிருக்கிறாள்? அவளுக்கு என்ன குறை இருக்கப் போகிறது?

சித்திரா

குறையா? அவளுக்குக் குறைகள் இல்லாமலென்ன? அவள் பாக்கியமில்லாதவளாயிற்றே! சாமானிய ஸ்திரீகளுக்கில்லாத அரிய குணங்கள் அவளிடமிருந்து என்ன பயனைக் கண்டாள்? ஆடவர்களுக்கு ஸ்திரீகளின் அழகொன்றிலேயே குறி. அவளுக்குச் சிறந்த குணங்களிருந்தும், வெளியழகு இல்லாததால், தனக்கேற்ற ஆடவரது மனத்தைக் கவர அவளாலாகவில்லை.

சூரியனுக்கு உலகத்தையெல்லாம் பிரகாசப்படுத்தும் சக்தியிருந்தும், அவனது கிரணங்களை மேகங்கள் மறைத்து விடவில்லையா? அது போல, சித்திராவின் உயர்ந்த குணங்களுக்கும் சக்திகளுக்கும், வெளியழகில்லாமையால் வெளிப்படையான தோற்றமில்லை. அவளது சரிதையைப் பற்றி என்னைக் கேட்காதீர்கள். அது ஆடவர்களுக்கு ருசிக்காது.

அருச்சுனன்

அப்படிச் சொல்லாதே, சித்திராவைப் பற்றின விவரங்களையெல்லாம் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற ஆவல் எனக்கு இருக்கிறது.

பார்க்கத்தகுந்த பல அருமையான காட்சிகளையுடைய ஒரு புதிய நகருக்கு நள்ளிரவில் வந்திறங்கின பிரயாணியைப் போல, நான் இப்போது இருக்கிறேன். அந்நகரின் பெரிய மாளிகைகள், கூடகோபுரங்கள் முதலியவை நிழலோட்டமாக அவன் கண்ணுக்குத் தென்படும். கடலின் கோஷம் இடைக்கிடை காதிற்படுவதால், அந்நகரம் கடற்கரையிலுள்ளது என்று ஊகிப்பான். அந்நகரத்திலுள்ள பல அற்புதக் காட்சிகளையும் பார்க்க ஆவல்கொண்டு, எப்போது பொழுது விடியுமோ என்று காத்திருப்பவனைப்போல, நானும் அபூர்வமான குணங்களையும் சக்திகளையுமுடைய சித்திராவைப்பற்றி விவரமாய் அறிய வேண்டுமென்ற விருப்பத்தையுடையவனாக இருக்கிறேன். அவளுடைய கதையை எனக்குச்சொல்.

சித்திரா

சித்திராவின் பாக்கியமற்ற வாழ்வைப் பற்றிச் சொல்லக் கூடியதை உங்களுக்குச் சொல்லி விட்டேனே! இன்னும் சொல்வதற்கு என்ன இருக்கிறது?

அருச்சுனன்

என் மனத்துக்குத் தோன்றியவாறு, சித்திராவைப் பற்றி ஒரு மனக்காட்சியை அமைத்துக்கொண்

டிருக்கிறேன். சித்திரா வெண்ணிறமான குதிரையின்மேல் ஏறித் தனது இடது கையிற் கடிவாளத்தையும், வலது கையில் வில்லையும் பிடித்து, நாடெங்கும் போய்த் தனது குடிகளைக்கண்டு, ஜயதேவி வந்ததுபோல் சகல ஜனங்களுக்கும் தைரியத்தையும் உற்சாகத்தையும் அளிப்பதாக மனக் காட்சி காண்கிறேன். ஒருபெண்சிங்கம் தனது குட்டிகளை எதிரிகளிலிருந்து காப்பாற்றுகிறமாதிரி, அவள் அபூர்வ மான வீரத்துடன் தனது குடிகளைக் காப்பாற்றுகிருளென்று நான் எண்ணுகிறேன். வீரமே அழகு! சக்தியே அழகு! ஈடற்ற பலத்தைப்பெற்றுள்ள ஸ்திரீயின் புஜங் களுக்கு வேறு அழகோ அலங்காரமோ எதற்கு?

பாம்பு தோலுரிக்கும் பருவத்தில் அசைவற்றுக் கிடந்து, அக்காலமானதும் வெளியே நாலாபக்கங்களிலும் சஞ்சரிக்க ஆவல்கொள்வதுபோல, நானும் வெளியே போய் வீரதீரச் செயல்களைச் செய்ய விரும்புகிறேன். பிரியே, நீயும் என்னுேடுகூடவா, நாமிருவரும் வேகமான குதிரைகளின்மீது ஏறிக்கொண்டு, சேர்ந்து இணைபிரி யாமல் பிரகாசிக்கும் ஜோடி சூரியர்களாக உலகமெங்கும் சவாரி போவோம். சிற்றின்பங்களை அனுபவிப்பதற்கு மட்டும் தகுதியாய்ப் பசுமையும் இருளும் நறுமணங்களும் நிறைந்து ஒரு காராக்கிரகம் போலுள்ள இந்த இடத்தைவிட்டு, வெளியே போய், வீரச்செயல்களைச் செய்வோம், வா.

சித்திரா

நாதா! ஏதோ ஓர் உற்சாகத்தால் தூண்டப் பட்டு, இப்போது இவ்விதம் பேசுகிறீர்கள். இது உங்க ளது நிலையான விருப்பமாவென்று நான் சந்தேகிக்கிறேன்.

நான் கேட்கப்போகிற கேள்விக்கு உண்மையாக விடையளியுங்கள்.

இந்தக் கணம் ஏதோ ஒரு சக்தியால், நான் திடீரென இரவலாடைபோன்ற எனது மேனி யழகைக் களைந்து, உங்கள் கண்முன் நிற்பேனுயாகில், எனது மாறின உருவம் உங்களுக்குப் பிடித்திருக்குமா? சிங்காரமயமான எனது சுந்தரவடிவத்தைத் தள்ளிவிட்டு, மலர்போன்ற எனது தேகமென்மையையும் ஒழித்துவிட்டு, உங்கள் கண்ணெதிரில் வீரபலத்துடன் நான் நின்றுல், உங்களுக்குச் சகிக்குமா? துவளுங் கொடிபோல உங்களைத் தழுவிக் கொண்டு வாழ்க்கையை நடத்தும் நான், இளந்தருவைப் போலத் தனிப்பலத்தோடு நின்றுல், ஆடவரான உங்களுக்கு என்னிடத்திற் பிரியமிருக்குமா? அப்போது என்னை உங்களுக்குப் பிடித்திருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை. யெளவன தசை நிலையற்றதென்றுலும், அது இருக்கும் வரை நான் இன்பவிளையாட்டுக்குரிய சாதனங்களை என்னைச் சுற்றி வைத்துக்கொண்டு, நீங்கள் எப்போது வீட்டுக்கு வருவீர்களென்று பொறுமையுடன் காத்திருப்பதே நலம். நீங்கள் என்னிடம் வரும்போது, உங்களைப் பிரியமாய் வரவேற்று, உங்களுக்கு இன்பத்தை அளிப்பேன். எப்பொழுது வேண்டுமானுலும், என்னைவிட்டு உங்கள் காரியங்களுக்கோ, வேறு வேடிக்கைகளுக்கோ குசாலாய்ப் போங்கள். எனக்கு மூப்பு வந்தபோது, எந்த ஸ்தானத்தை அளிக்கிறீர்களோ, அந்த ஸ்தானத்திலே நான் இருந்து வாழ்வேன்.

அப்படிக்கின்றி, உங்களது ஓய்வு காலத்து விளையாட்டுத்தோழியாகவிருந்துவரும் நான், உங்களது வேலைகளை உங்களோடு சேர்ந்து செய்வேனானால், உங்களுக்கு எப்படிப் பிடிக்கப்போகிறது? வலதுகை தனது பலத்தில் பெருமையடைந்து பெரிய பளுவைத் தாங்கிக் கொண்டிருக்கும்போது, இடதுகையும் அதோடுகூடப் பளுவைத் தாங்கும் பயிற்சிபெற்றால் வலது கைக்குச் சகிக்குமா?

அருச்சுனன்

பிரியே! இன்னும் நான் உன்னை உள்ளபடி அறிந்து கொள்ளமுடியவில்லை. முதலில் தங்கத்தை உருக்கிவார்த்த மாதிரியுள்ள உனது அழகிய தேகத்தையும். வசீகரமான வதனத்தையுங் கண்டேன். பிறகு உன்னுடன் கூடி வாழும்போது, உனது அரிய குணங்களைக் காண்கிறேன். நீ ஒரு தங்கவிக்கிரகத்தில் மறைந்து உரையும் ஒரு தெய்வமென்று எனக்கு இப்போது தோன்றுகிறது. உன்னால் அடையும் பயன்களுக்கு ஈடான கைம்மாறு செய்யமுடியாதவனாக இருக்கிறேன். அதைச் செய்தாலன்றி, எனது காதலுக்குப் பூர்த்தியேற்படாது.

சில சமயங்களில் உன்முகத்தில் நான் காணும் துக்கக் குறிகளிலிருந்தும், நீ விளையாட்டுப்போலச் சொன்ன போதிலும் ஆழ்ந்த உண்மைப்பொருளையுடைய உனது மொழிகளிலிருந்தும், உன் தேகத்தில் மறைந்து உரையும் உத்தம ஜீவன், தன்னை மூடிக்கொண்டிருக்கும் மாயத்து இலைக் கிழித்துக்கொண்டு வெளியே வந்து தன்னை உள்ள

படியே காண்பித்துக்கொள்ள முயலுவதுபோல எனக்குத் தோன்றுகிறது. மாயக்காட்சியை முதலிற் கண்டு, அதிலிருந்து உண்மையை உள்ளபடியே காணுவது மாந்தர்க்கு ஏற்பட்டுள்ளவழி. உண்மை என்ற தேவதை, முதலில் தனது பக்தர்களுக்குக் காட்சி அளிக்கும்போது அவர்களுக்குப் பிரியமாயிருக்கும்படியான ஒரு வெளி ரூபத்தை எடுத்துக்கொண்டு வருகிறுள். ஆனல் பக்குவ காலம் வந்ததும், தனது வெளிரூபத்தையும் ஆபரணங்களையும் களைந்துவிட்டு, தனது சுயரூபத்தில் காட்சி யளிக்கிருள். அவ்வாறே உனது வெளிரூபத்தையன்றி, உண்மையான சுயரூபத்தை நான் காண முயலுகிறேன்.

(சித்திரா கைகளால் முகத்தை மூடிக் கொண்டு கண்ணீர்விடுகிருள்.)

ஏன் இந்தக் கண்ணீர்? ஏன் முகத்தை உன்கைகளால் மூடிக்கொள்கிருய்? நான் சொன்னதில் ஏதேனும் சொற்கள் உன் மனத்துக்குக் கஷ்டத்தை விளைவித்தனவா? அப்படியாயின், நான் சொன்னதை மறந்துவிடு.

பிராணநாயகி! உன்னைப் பற்றிப் பூரணமான அறிவு எனக்கு எப்போது உண்டாகுமோ, அப்போது உண்டாகட்டும். நமக்குள்ள இப்போதிய வாழ்வில் ஒவ்வொரு கணமும் ஒரு புதிய இன்பத்தையும் அறிவையும் எனக்குக் கொண்டுவருகிறது. இவ்வாழ்வே எனக்குப் போதுமானது. நீ எக்காரணத்தாலும் வருந்தவேண்டாம்.

## காட்சி 9

[இடம் - காட்டினிடையிலுள்ள வீடு.]

(காலம் - ஓராண்டு முடிந்த மறுதினம்.)

(அருச்சுனன் வீற்றிருக்கும்போது, சித்திரா தன்னைத் தலை முதல் கால்வரை ஒரு துகிலால் மூடிக் கொண்டு பிரவேசிக்கிருள்.)

சித்திரா

நாதா! நேற்ருேடு நமது மணத்தின் முதலாவதாண்டு முடிந்தது. இந்த ஆண்டில் அனுபவிக்கத் தக்க இன்பங்களை நீங்கள் பூரணமாக அனுபவித்தாயிற்ரு? அப்படியாயின், நான் உங்களுக்குச் செய்யும் முதற்கால பூஜை முற்றுப் பெற்றது.

ஆனல் நான் செய்யவேண்டிய இரண்டாங்கால பூஜை ஒன்று இருக்கிறது. அதையும் உங்கள் காலடியிலே யிருந்து செய்ய விரும்புகிறேன். உங்களைப் பூஜிப்பதற்காக, நான் தேவலோகத்திலிருந்து ஒப்பற்ற அழகையுடைய புஷ்பங்களைக் கொண்டு வந்திருந்தேன். புஷ்ப பூஜை முடிந்து விட்டதாலும், புஷ்பங்கள் வாடிவிட்டதாலும், நான் அவைகளை இப்போது வெளியே எறிந்து விடுகிறேன்.

(தான் மூடிக் கொண்டிருந்த மேல் துகிலைக் களைந்து விடுகிறாள்.) என்னை இப்போது பாருங்கள்!

உங்களுக்குப் புஷ்ப பூஜை செய்து கொண்டிருந்த போது, என்னை நீங்கள் புஷ்பம் போன்ற திவ்வியமான லக்ஷணங்களோடு கண்டீர்கள். இப்போது நீங்கள் பார்ப்பது, விசேஷமான லக்ஷணங்களில்லாத, எனது சுயரூபம். நான் மகத்தான உலக பாட்டையில் திரளான ஜனங்களுடன் நடந்து போகும் பிரயாணிகளுள் ஒருவளே! நான் உடுத்தியிருக்கும் ஆடையிற் புழுதி படிவதும், எனது கால்களில் முட்கள் தைப்பதால் இரத்தம் சிந்துவதும், கால்நடைப் பிரயாணிகளுக்குச் சகஜமான சம்பவங்கள். புஷ்பத்துக்கே ஒரு நாளைய வாழ்வாக மட்டும் இருக்கும் குறைவற்ற அழகை, மானிட ஸ்திரீயான நான் நிலையாக எப்படி அடையமுடியும்? இப்போது எனது மேனியழகு குறைந்திருந்த போதிலும், நான் உங்களுக்கு அளிக்க விருப்பது, மேனி யழகைவிட மேலாக மதிக்கத் தக்க ஒரு பொருள். அது என்னவென்றால், நிலையான உள்ளழகையுடைய ஒரு ஸ்திரீயின் உள்ளம். அது அற்பசொற்பமானதன்று. அது மானிடப் பிறவிக்குரிய அளவிலா அன்பிற்கும் உயர்ந்த லட்சியங்களுக்கும் உறைவிடம். வாழ்க்கையில் உண்டாகும் சுகதுக்கங்களில் தர்ம நிலை தவறாத தன்மையையுடையது. எனது வெளியழகினால் செய்த சிறிதுகாலப் பூஜை முடிந்ததால், பாக்கிக் காலத்துக்கு எனது அன்பினால் உங்களுக்குப் பணிவிடை செய்துவரும்படி எனக்கு அனுமதி யளியுங்கள். இது ஒன்றே எனது வேண்டுகோள்.

இப்போது எனது விருத்தாந்தத்தைச் சொல்லி விடுகிறேன். நீங்கள் எந்தச் சித்திராவின் குணங்களைப் பற்றிக் கேள்விப்பட்டு வியப்படைந்தீர்களோ, அந்தச் சித்திராவே நான். இந்நாட்டு அரசி நானே.

ஒருநாள் சிவன் கோவிலுக்கெதிரே, சிறந்த ஆடையையும், ஏராளமான ஆபரணங்களையும் அணிந்து கொண்டு உங்கள் முன்னிலையில் வந்து நின்ற பெண்ணை உங்களுக்கு நினைப்பிருக்கிறதா? ஆடவர்கள் ஸ்திரீகளை அணுகித் தம் விருப்பத்தைத் தெரிவிக்கிறமாதிரி, அந்தப் பெண் தனது விருப்பத்தை உங்களிடம் தெரிவித்தாள். அவளை வேண்டாமென்று நீங்கள் தள்ளினது சரியென்றே எனக்கு இப்போது தோன்றுகிறது. ஏனெனில் அந்தப் பெண் நானேயாக இருந்தபோதிலும், அவளிடத்தில் எனது உண்மையான தன்மை பிரகாசிக்கவில்லை. அவள் எனது முதல் வேஷம்.

பிறகு, தேவதைகளது அருளினால் நான் ஓராண்டு காலத்துக்குத் திவ்விய லக்ஷணங்களைப் பெற்று, உங்களை ஏமாற்றத்துக்குள்ளாக்கி, உங்களது பிரிய நாயகியாக வாழ்ந்தேன். அந்த அழகிய உருவம் எனது இரண்டாவது வேஷமே தவிர, உண்மையான நானன்று.

என்னை உள்ளபடியே நீங்கள் இனிமேல் தெரிந்து கொள்ளலாம். நான் உங்களால் பூஜிக்கப்படத் தகுந்த தேவலோக ஸ்திரீயுமன்று. அலட்சியமாய்த் தள்ளிவிடத் தக்க அற்ப ஜீவனுமன்று. ஏனெனில், வீரதீரச் செயல்களை நீங்கள் செய்யப்போகும்போது, என்னை

உங்களது பக்கத்தில் வைத்துக் கொண்டாலும், உங்களது முக்கியமான காரியங்களில் உங்களது வாழ்க்கைத்துணைவியாக என்னைச் சேர்த்துக் கொண்டாலும், அப்போது என்னை நீங்கள் உள்ளபடி அறிவீர்கள்.

அன்றியும், நான் தரிக்கிற கர்ப்பம் ஓர் ஆண்பிள்ளையாகப் பிறக்குமாகில், அந்தப் பிள்ளை இரண்டாவது அருச்சனன் என்று பேரெடுக்கும்படி, நானே அவனுக்குப் பயிற்சியளித்து, உங்களிடம் கீர்த்திபெறும்படி அனுப்புவேன். அப்போது என்னை நீங்கள் செவ்வனே அறிந்துகொள்வீர்கள். இவையெல்லாம் நமது இல்லற வாழ்வில் நான் இனிச் செய்ய விரும்பும் பணிகள்.

அருச்சுனன்

பிரியே! நான் பாக்கியசாலி. எனது வாழ்வின் இன்பம் இன்றே பூர்த்தியாயிற்று.

சுபம்! சுபம்!! சுபம்!!!

## நாடக விமர்சனை

### விளக்கக் குறிப்புக்கள்

### காட்சி 1

1. பக்கம் 23 (சித்திரா அருச்சனனை முதன் முதல் கண்டது);—சித்திரா காட்டில் வேட்டையாடும்போது, அருச்சுனனை முதன் முதலாகக் கண்டாள். அப்போது அவன் ஒரு வீரனாகக் காணப் பட்டானென்று, சித்திராவின் வார்த்தைகளிலிருந்து விளங்குகிறது.

2. ப. 25, 26 (அருச்சுனனை இரண்டாம் முறைகண்டது);—சித்திரா அருச்சுனனை இரண்டாம் முறை கண்டபோது, அவனிடத்தில் ஒருமாறுதலையும் சித்திரா காணவில்லை. ஆனால், தன்னை மணக்கும்படி சித்திரா கேட்டதற்கு, அவன் தான் பிரம்மசரியவிரதத்தைக் கைக்கொண்டிருப்பதால் மணக்க இயலாது என்று விடையளித்தான். மஹாபாரதத்திலுள்ள விவரப்படி அவன் சொன்னது உண்மையே. ஏனெனில், அவன் வனவாசத்துக்குப் புறப்படும்போது, பிரம்மசரிய விரதத்தைக் கைக்கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது.

3. ப. 28, வரிகள் 13, 14 (சித்திரா கேட்ட வரம்):—சித்திரா தனக்கு ஒரே நாளைக்கு அழகையளித்தாற்போதுமென்று கேட்டதன் கருத்து, அந்த ஒரு நாளழகைக்

கொண்டு, தனக்கு அருச்சுனன் மனத்தில் துளியிடம் கிடைத்துவிட்டால், பிறகு தனது சுயமுயற்சிகளாலேயே அவனது பூரணமான காதலை அடையலாமென்பது.

**4.** ப. 28, வரிகள் 19-21 (*தேவதைகள் அளித்தவரம்*): சித்திரா ஒருநாள் அழகைக் கேட்க, தேவதைகள் அவளுக்கு ஓராண்டு அழகை அளித்தனர். சித்திரா அருச்சுனனது காதலை உடனே அடைவதற்கும், பிறகு ஓராண்டு காலத்துக்குத் தன் காதலனோடு இன்ப வாழ்வு வாழ்வதற்கும், பயன் படும்படியாக ஓராண்டு அழகை யளித்தனர். இதன் உட்கருத்துக்கள், ஒவ்வொரு ஸ்திரீயும் யுவதிப் பருவத்தில் ஆடவரது மனத்தைக் கவரும்படியான அழகைப் பெறுகிருளென்பதும், அவ்வழகு சிறிது காலத்துக்கு வெகு பிரகாசத்துடன் விளங்கிப் பிறகு குறைந்து விடுகிறது என்பதுமாம்.

## காட்சி 2

5. ப. 29, வரிகள் *9 - 11* (*சித்திராவின் உருவத்திலுண்டான மாறுதல்*):—பால்யப் பருவத்திலிருந்து யௌவன பருவத்தை யடையும்போது, பையன்களாகட்டும், பெண்களாகட்டும், உருவத்திலும் தேக அமைப்பிலும் பெரிய மாறுதல்களை யடைகிருர்கள். முக்கியமாகப் பெண்களிடம் காணப்படும் மாறுதல்கள் அதிகமான வியப்பை யளிக்கத் தக்கவையாயிருக்கின்றன. பார்வைக்கு ஒரு பையனைப்போல விருந்த ஒரு சிறுபெண், ஓராண்டு காலத்துக்குள் ஓர் யுவதிக்குரிய லக்ஷணங்களை அடைந்து,

அடையாளந் தெரியாமல் ஆவதை நாம் அனுபவத்திற் பார்க்கிறோம். இயற்கையாகவே சிறிது காலத்துக்குள் உண்டாகும் இம் மாறுதல், தேவதைகளது அருளால் ஒரே நாளையில் உண்டாயிற்றென்பது நாடகக் கதை. இப்புத்தகத்தின் அட்டைப் படத்திலுள்ள சித்திராவின் உருவமும், 2-வது காட்சியில் காண்பிக்கப் பட்டிருக்கிற சித்திராவின் உருவமும் இம்மாறுதலைச் சித்தரித்துக் காட்டுகின்றன.

6. ப. 29, வரி 14 (சித்திரா தன் பிம்பத்தைத் தண்ணீரிற் பார்த்தல்):—காட்டில் வசிக்கும் சித்திரா விடத்தில் முகக்கண்ணாடி ஏது? அவள் ஏரிகரையில் நின்று, தண்ணீரிற் காணப்படும் தனது பிம்பத்தைப் பார்க்கிருள்.

7. ப. 33, வரி 17; ப 34, வரி 13 (அருச்சுனன் துறவியாக மாறினது):—சித்திரா அருச்சுனனை மூன்றும் முறை கண்டபோது, அவனை அடையாளங் கண்டு கொள்ளவில்லை. அவன் அப்போது துறவி உடையிலிருந்ததுதான் இதற்குக் காரணமாயிருக்க வேண்டும். இந்தக் காட்சியில் சித்திரா அவனைப் பலமுறை துறவியென்று அழைப்பதிலிருந்து, இவ்விஷயம் விளங்குகிறது.

8. ப, 35, வரி 1 - 4 (அருச்சுனன் தன்னை இன்னுரென்று சொல்லிக் கொள்ளுதல்):—துறவி உடையிலிருந்த அருச்சனன் தன்னை இன்னுரென்று தெரிவித்துக் கொண்டபோது, சித்திராவுக்கு ஆச்சரியம் உண்டாகிறது.

௯. ப. 35, பிரம்மசரிய விரதமும் துறவறமும்:—பிரம்மசரிய விரதத்துக்கும் துறவறத்துக்கும் பெரிய வித்தியாசமுண்டு. பிரம்மசரியவிரதமென்பது குறிப்பிட்ட காலம் முடியும்வரையிலோ, அல்லது ஆயுள் முழுவதிலுமோ, மணஞ்செய்து கொள்வதில்லையென்று மட்டும் உறுதி செய்துகொள்வது. துறவறமென்பது, உலகப்பற்றுக்கள் யாவற்றையும் துறப்பது. மஹாபாரத விவரப்படி அருச்சுனன் வனவாசத்துக்குப் புறப்பட்டபோது துறவியாக ஆகவில்லை. சுபத்திரையைத் தந்திரமாய் அடையும் பொருட்டு, அவன் பிரபாஸ தீரத்தத்தில் துறவியாக வேஷம்போட்டுக் கொண்டான். இது ஒரு போலித்துறவறம். இந்நாடகத்தில் அருச்சுனன் துறவியாக மாறினதுக்கு ஒருகாரணத்தை நாம் ஊகிக்கவாம். பிரம்மசரிய விரதத்தைக் கைக்கொண்டு தேச சஞ்சாரம் செய்யும் அருச்சுனனை, சித்திரா அணுகித் தன்னை மணந்துகொள்ளும்படி கேட்டதும், அவன் இவ்வாறே வேறு ஸ்திரீகளும் தன்னைக் கேளாமலிருப்பதற்காகத் துறவியாகக் காணப்படுவதே ஏற்ற வழி யென்று எண்ணி, துறவி உடையை அணிந்திருக்க வேண்டும்.

*10.* ப. 35, வரிகள் *19-22* (சித்திராவுக்குண்டான புதிய உணர்ச்சிகள்):—அருச்சுனனைத் தன் அழகால் வசியப்படுத்தி, அவன் பிரம்மசரிய விரதத்தை முடித்துக் கொண்டுதன்னை மணக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் சித்திரா வந்திருந்த போதிலும், மேன்மைபொருந்திய துறவறப்பிரதிஞ்ஞை செய்துகொண்ட பிறகு, தன் மேனியழகைக் கண்டு மோகித்துத் துறவறத்தைத் கைவிடுவது வெட்கக்கேடு என்பதாகச் சித்திராவுக்குத் தோன்றிற்று.

11. ப. 36, வரிகள் 3-14 (சித்திரா அருச்சுனனுக்குக் கூறின மொழிகள்):—சித்திரா ஓர் ஆத்ம தரிசனி. அவள் தேகத்தின் அழகு அநித்திய மென்பதை அறிந்தவள். "இவ்வுண்மையை ஏன் நீங்கள் அறியவில்லை?" என்று அருச்சுனனைக் கேட்கிருள். ஸ்திரீகளுக்கு ஆத்மா ஒன்றிருக்கிறதென்று ஆடவர்களுக்குத் தெரியவில்லையே என்கிருள். மேலும், "எனது குணங்களொன்றையும் நீங்கள் தெரிந்து கொள்ளாமலே, எனது மேனி யழகொன்றைக் கண்டு என்னை விரும்புவது மெய்க்காதலன்று" என்று கூறுகிருள்.

12. ப. 37, வரிகள் 4-9 (அருச்சுனனது மறுமொழி) சித்திரா கூறினதற்கு ஏற்ற மறுமொழியை அருச்சுனன் கூறினுன். அதாவது, "நீ மற்ற ஸ்திரீகளைப் போன்றவளன்று, உன்னை ஒருகணம் பார்த்தவுடனேயே, உனது வெளியழகோடு உனது ஆத்ம குணங்களையும் நான் கண்டு கொண்டேன்" என்று அருச்சுனன் விடையளித்தான். இவ்விடையில் சித்திராவுக்குத் திருப்தி உண்டாகவில்லை. தனக்கு மணக்கச் சம்மதமில்லை என்று கூறி, அருச்சுனனைப் போகச் சொல்லிவிட்டாள்.

## காட்சி 3

13. ப. 41, வரிகள் 11-12 (சித்திராவின் மனத்தில் ஆழ்ந்து கிடந்த காதலுணர்ச்சிகள்):— சித்திரா தனது காதலுணர்ச்சிகளை அறவே ஒழித்துவிட்டதாக எண்ணினுள்; ஆனல் அவ்வுணர்ச்சிகள் அவளது மனத்திலேயே ஆழ்ந்து கிடந்தன.

14. ப. 42, வரிகள் 2-6 (மன்மதன் சித்திராவுக்கு மனத் தெளிவு உண்டாக்கியது):— சித்திரா அருச்சுனனை மணக்கச் சம்மதித்ததில் தவறு யாதுமில்லையென்றும், அவள் ஐயம் நீங்கித் தனது காதலனுடன் மனக்கவலையின்றி இன்பத்தை அனுபவிப்பதே நலமென்றும் மன்மதன் கூறுகிருன்.

15. ப. 42, வரிகள் 10-21 (சித்திராவின் மனக் கவலை):— சித்திரா, தனது அழகைக்கொண்டு அடைந்த அருச்சுனனது காதல் நீடித்து நிற்காதே, பிறகு என்ன செய்வது? என்று தனது மனக் கவலையை எடுத்துச் சொல்கிருள்.

16. ப. 43, 44 (அழகுவரத்தைத் திரும்பி வாங்கிக் கொள்ளும்படி சித்திரா கேட்டது):— தனக்கு வெளியழகே வேண்டாமென்றும், தன்னை யாதொரு வெளியழகுமின்றித் தன் காதலர்முன் தோற்றுவிப்பதே மேலானதென்றும், சித்திரா சொல்கிருள்.

17. ப. 44, வரி 14 முதல் (வஸந்தன் செய்த உபதேசம்):— ஸ்திரீகளின் வாழ்க்கையில் உண்டாகும் தசைகளைத் தாவரங்களது பருவ காலங்களுக்கு ஒப்பிட்டு, யுவதிப் பருவத்தில் வெளியழகினுற் சோபித்து, பிறகு தானுகவே வரும் மாதர்ப் பருவத்தில் நிலையான குணங்களால் கணவனது மெய்க் காதலையடைவது இயற்கைமுறை என்பதாக, மெய்க்காதலின் தத்துவத்தை வஸந்தன் உபதேசிக்கிருன்.

18. ப. 45, வரிகள் 4-5 (வஸந்தன் முடிவாகச் சொன்ன புத்திமதி):— காதலர்கள் ஒருவரை யொருவர் உள்ளபடி அறிந்து மெய்க் காதலுண்டாவதற்குச் சிறிது காலம் நெருங்கிப் பழகவேண்டும். "அதுவரையில் உங்கள் இளங் காதல் வாழ்வை இன்பமாய் நடத்து" என்று வஸந்தன் புத்திமதியளிக்கிறான்.

## காட்சி 4

19. ப. 48 (கோவில் மணியின் ஒலி) காதலர்கள் மரமடர்ந்த காட்டினிடையில் வசிக்கிறார்களென்றும், தூரத்திற் சில கிராமங்கள் இருக்கின்றன வென்றும் தெரிகிறது.

## காட்சி 5

20. ப. 50 (மன்மதனும் வஸந்தனும்):— மன்மதன் வஸந்தனிடத்தில், இக்காதலர்களது இன்ப ஆண்டு முடிவுக்கு வந்து கொண்டிருப்பதால், தாம் இவர்களுக்குச் செய்ய வேண்டிய வேலை கிட்டத்தட்ட முடிந்து விட்டதென்று சொல்கிறான். அதாவது ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் யௌவன பருவத்தில் காதலை உண்டாக்கி வளர்ப்பது, இயற்கைத் தேவதைகளான தங்களது வேலை யென்றும். பிறகு இன்பமாய் வாழ்வது அவர்களது சொந்தப் பொறுப்பு என்றும் கருத்து.

## காட்சி 6

21. ப. 51 (அருச்சனனுக்குச் சித்திராவிடம் உண்டான பெருமதிப்பு):— அருச்சுனன் காலையில் விழித்துக் கொண்டதும், சித்திராவின் அரிய குணங்களை நினைத்துப் பெருமகிழ்ச்சி யடைகிறான். சித்திராவைத் தனக்குக் கிடைத்த விலையற்ற ஒரு மாணிக்கமென்று எண்ணுகிறான். முதலில் சித்திராவின் மேனியழகைக் கண்டு மோகித்த அருச்சனன், இப்போது அவளது ஆத்ம லக்ஷணங்களைக் கண்டு மகிழ்கிறான். அவளோடு நெருங்கிப் பழகும்போது, அவளது குணங்களை அருச்சுனன் அறிந்து கொண்டு, அவளிடத்தில் நிலையான காதல் அடையுங் காலம் வருமென்று வஸந்தன் அவளுக்குச் சொன்னது உண்மையாயிற்று.

22. ப. 52 (அருச்சுனன் வேட்டைக்குப் போக விரும்பினது):— மழை பெய்தவுடன், மலைச் சரிவுகளில் அருவிகள் வேகமாக ஓடிவருவதையும், எங்கே பார்த்தாலும் தண்ணீர் பெருகி ஆறுகளாக ஓடுவதையும் அருச்சுனன் சித்திராவுக்குக் காட்டுகிறான். அவனது பால்ய பருவத்தில், அண்ணன் தம்பிமார்களோடு சேர்ந்து, இம் மாதிரியான மழை நாட்களில், காட்டிற்குட்போய் வேட்டையாடி வந்த விவரங்களைச் சொல்லி, தனக்கு இப்போது வேட்டையாட விருப்பம் உண்டாயிருப்பதாகக் கூறுகிறான். ஆனால் அவன் வேட்டைக்குப்

போவதற்குச் சித்திரா அனுமதியளிக்கவில்லை. இந்தக் காட்சியிலுள்ள இயற்கையின் வர்ணனையிலிருந்து காதலர் இருவரும் மலைப்பிராந்தியத்தில் காட்டினிடையில் வசிக்கிறார்கள் என்று தெரிகிறது.

23. ப. 55, வரிகள் 7-12 (அருச்சனன் நிலையான இன்ப வாழ்வை விரும்பியது):— "இப்போதுள்ள இன்ப வாழ்வு மாயமாய் மறைந்துவிடும். ஆகையால் நிலைத்த இன்பத்தை அளிக்கக்கூடியது எதுவோ, அதை உன்னிடத்தில் அபேட்சிக்கிறேன்" என்று அருச்சுனன் சொல்கிறான். இதிலிருந்து, சித்திராவிடத்தில் மேன்மையான குணங்கள் இருப்பதை அருச்சுனன் அறிந்து கொண்டானென்று தெரிகிறது. ஆனாலும் சித்திரா தான் இன்னாரென்று தன் காதலருக்கு இன்னும் தெரிவிக்கவில்லை.

24. ப. 55, வரிகள் (சித்திரா அளித்த விடை):—"கடவுள் ஒவ்வொரு விதமான அனுபவத்திற்கும் ஒரு கால வரையறை ஏற்படுத்தியிருக்கிறார். இப்போது இந்தக் காலத்துக்குரிய இன்ப அனுபவங்களைக் குறைவற அனுபவிப்பதே நியாயம்" என்று விடையளித்தாள். இதன் உட்கருத்து என்னவென்றால், "இந்த ஆண்டு முடிந்ததும், நமக்கு வேறுவிதமான இன்ப அனுபவங்கள் ஏற்படுமென்ற நம்பிக்கையுடன் இருங்கள்" என்பதாம்.

## காட்சி 7

25. ப. 56 (இன்ப ஆண்டின் கடைசி நாள்):— சித்திரா தனக்கு அன்றையதினம் என்றுமில்லாத

வனப்பையளிக்க வேண்டுமென்று தேவதைகளைக் கேட்கிறாள். ''அப்படியே ஆகட்டும்'' என்று தேவதைகள் அருளுகிறார்கள்.

## காட்சி 8

*26*. ப. *57, 58* (சித்திராவின் புகழ்) :— கிராமக் குடிகள் சித்திராவின் வீரத்தையும் தர்ம ஆட்சியையும் அருச்சுனனிடம் புகழ்கிறார்கள்.

*27*. ப. *59*, வரிகள், *10, 11* (சித்திராவின் புகழ்):— அருச்சுனன் சித்திராவின் சக்திகளையும் குணங்களையும் பற்றித் தான் கேள்விப்பட்டதை அவளிடமே கூறுகிறான். அவளே சித்திரா வென்பது இன்னும் அவனுக்குத் தெரியாது,

*28*. ப. *59*, வரிகள் *14 - 19* (அபலையாயிருக்கும் சாமானிய ஸ்திரீயின் இன்பவாழ்வு):—சித்திரா அபலையாயிருக்கிற சாமானிய ஸ்திரீகள் எவ்வாறு ஆடவர்களது அன்பைப் பெற்று இன்பமாக வாழ்கிறார்களென்பதை வர்ணிக்கிறாள்.

*29*. ப. *63; 64* (அருச்சுனன் சித்திராவைப்பற்றி அமைத்துக்கொண்ட மனப்பிம்பம்) :— சித்திராவைப் பற்றித் தான் கேள்விப்பட்டதிலிருந்து, ஒரு வீரமாதின் உருவத்தைத் தன் மனத்தில் அமைத்துக்கொண்டு, அந்த மனப்பிம்பத்தை வர்ணிக்கிறான். ஒரு ஸ்திரீக்கு வீரமிருக்குமேயானால், அவளே அழகி, அவளே சிறந்த ஸ்திரீ, என்கிறான். வீரமே அழகு! சக்தியே அழகு! என்கிறான்.

*30*. ப. *64* வரிகள், *14-23* (அருச்சுனன் சித்திராவைக் குதிரையேறித் தன்னோடு வரும்படி கேட்கிறான் ):— அருச்சுனனுக்குத் தன் காதலி சித்திராவே யென்று தெரியாத போதிலும், அவள் சித்திராவைப் போன்ற ஒரு வீரமாது என்ற எண்ணம் உண்டாகி, அவளைத் தன்னுடன்

குதிரையேறி வெளியே வரும்படி அழைக்கிறான். ஆனால் அவனது வேண்டுகோளுக்கு அவள் இணங்கவில்லை.

31. ப. 66 (அருச்சுனனது அளவற்ற மகிழ்ச்சியும், அவனுக்கிருந்த ஒரே மனக்குறையும்):— தன் காதலியுடன் ஓராண்டு கூடி வாழ்ந்ததின் பயனாக, அருச்சுனன் அவளது பூரணமான அன்பையும், அர்த்தம்நிறைந்த சுவையுள்ள மொழிகளையும், இதமான பணிவிடைகளையும், கண்டும் கேட்டும் அனுபவித்தும், அளவற்ற மகிழ்ச்சியை அடைந்திருக்கிறான். அவளை ஒரு தங்க விக்கிரகத்தில் மறைந்து உறையும் ஒரு தெய்வமென்கிறான். ஆனால் அவள் யாரென்று தெரியாததும், அவளைப் பூரணமாக அறியமுடியாமலிருப்பதும், அவனுக்கிருந்த மனக்குறை. அவனது மனக் குறையைக் கேட்டு, சித்திரா கண்ணீர் விடுகிறாள். ஓராண்டு முடிவதற்குள், தன்னைப்பற்றிய விவரங்களைத் தன் காதலரிடம் சொல்வதற்கில்லையேயென்று ஏங்கினாள்போலும்.

அவள் துக்கத்துக்குக் காரணம் இன்னதென்று அருச்சுனனுக்குத் தெரியவில்லை. தான் சொன்ன மொழிகளில் எவையேனும் அவளது மனத்துக்குக் கஷ்டத்தை விளைவித்திருந்தால், அவற்றை மறந்துவிடும்படி கேட்டுக் கொள்கிறான். கடைசியாக, "உன்னைப்பற்றிய பூரணமான அறிவு எனக்கு எப்போது உண்டாகுமோ, அப்போது உண்டாகட்டும். இப்போது நான் உன்னால் ஒவ்வொரு கணமும் புதிது புதிதாக அடையும் இன்பங்களே எனக்கு ஆயுட்பரியந்தம் போதுமானவை" என்று கூறுகிறான்.

## காட்சி 9

32. ப. (68-70) 9-ஆவது காட்சியில், சித்திரா தனது விருத்தாந்தத்தையும், தான் இனிச் செய்ய விரும்பும் பணிகளையும் தன் காதலருக்குப் பூரணமாய்த் தெரிவிக்கிறாள்.

இதுவரையில் தனது சௌந்தரியங்களால் தான் புஷ்ப பூஜை செய்து தன் காதலருக்கு இன்பத்தை யளித்தது தனது முதற்கால பூஜையென்றும், இனிமேல் தனது ஆத்ம லக்ஷணங்களால் தன் கணவருக்கு இன்ப மளித்து, அவருக்கு உண்மையான வாழ்க்கைத் துணைவி யாக விருப்பது. தான் அவருக்குச் செய்யப்போகிற இரண்டாங்கால பூஜை யென்றும் சொல்கிருள்.

அருச்சுனன், வியப்பை யளிக்கும்படியான சித்திரா வின் சரித்திரத்தைக் கேட்டு மகிழ்ந்து, அவளை மனைவி யாக அடைந்தது தனது பாக்கியமென்றும், இன்றே தனது வாழ்வின் இன்பம் பூர்த்தியாயிற்றென்றும் சொல் கிருன்.

## மஹா பாரதக் கதையிலுள்ள முழு விவரங்கள்

1. மஹா பாரதத்தின் வடதேசப் பதிப்புக்கும், தென்தேசப் பதிப்புக்கும் கீழ்க்கண்ட வித்தியாசங்கள் உள்ளன :

(1) வனவாச காலவரையறையில் வித்தியாசம்:— வடபாடத்தின்படி, அருச்சுனன் 12-ஆண்டுகளுக்கு வனவாசஞ் சென்றான். தென் பாடத்தின்படி. வனவாசம் 12 மாதங்களுக்கு மட்டுமே. தென் பாடப்படி, அருச்சுனன் சித்திராவை மணக்க அந்த 12 மாதங்கள் முடியும்வரை காத்திருந்து, 13-ஆவது மாதத்தில் மணந்து, 3 மாதங்கள் அங்கேயே தங்கியிருந்தான். வட பாடப்படி, அருச்சுனன் வனவாசகால நிபந்தனையை மீறிச் சித்திராவை மணந்து 3 ஆண்டுகள் தங்கியிருந்தான்.

(2) சித்திராவின் ஊரும் அது இருந்த இடமும்:— தென் பாடப்படி. அருச்சுனன் காவேரி நதியைத் தாண்டி கடற்கரை யோரமாகப் பிரயாணஞ் செய்யும்போது, மணலூர் (அல்லது மணலூர்ப்புரம்) என்ற நகரத்துக்கு வந்தான். இந்தப் பாடப்படி, சித்திராங்கதையின் நகரம் திராவிட நாட்டிலுள்ளது என்று ஆகிறது. வடபாடத்தில், காவேரியைப்பற்றிச் சொல்லவேயில்லை. ஊரின் பெயர் மணிபுரம் என்று கண்டிருக்கிறது. இதன்படி, சித்திராங்கதையின் நகரம் வட நாட்டிலுள்ளதாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

2. மஹா பாரதத்திலுள்ள பின் கதை :—

(1) அருச்சுனன் மணிபுரத்தை விட்டுப் போகும் போது, சித்திராங்கதையிடம், "நீ குழந்தையைப் போஷித்துக்கொண்டு, இங்கேயே இரு. என் அண்ணா தர்மபுத்திரர் அசுவமேத யாகம் செய்யப்போகிறார். அந்த

யாகத்துக்கு எல்லா அரசர்களும் வருவார்கள். உன் பிதாவும் வருவார். அவரோடுகூட நீயும் வந்து, என் தாயாரையும் அண்ணன் தம்பிமார்களையும் பார்க்கலாம்'' என்று சொன்னான்.

(2) சித்திராங்கதையின் புத்திரன் பப்ருவாகனன் அதிசூரனென்று பெயரெடுத்தான். அசுவமேத யாகக் குதிரையோடு அருச்சுனன் போகும்போது, மணிபுரத் தெல்லைக்கு வந்துசேர்ந்தான். பப்ருவாகனன் தன் பிதாவை எதிர்கொண்டு உபசரிக்கும்போது, அருச்சுனன் தான் பிதா வென்ற முறையில் வராமல் அயல் நாட்டரசனென்ற எதிரியாக வந்திருப்பதால் தன்னுடன் யுத்தஞ் செய்வது மணிபுர அரசனுன அவனது கடமை யென்று சொன்னதாலும், அவனுடைய பெரிய அன்னையான உலூபீ யென்ற நாகஸ்திரீயினால் தூண்டப்பட்டதாலும் தன் பிதாவுடன் யுத்தஞ் செய்தான். அருச்சுனன், பப்ருவாகனன் ஆகிய இருவரும் இந்த யுத்தத்தில் கீழே விழுந்துவிட்டார்கள். பிறகு இருவரும் பிழைப்பு மூட்டப்பட்டு எழுந்தனர். அருச்சுனன் வீரனான தன் புத்திரனை ஆலிங்கனஞ் செய்துவிட்டுப் போய்விட்டான். பிறகு நடந்த அசுவமேத யாகத்துக்குத் தன் அன்னை சித்திராங்கதையோடு ப்பருவாகனனும் வந்திருந்தான்.

## நாடகாசிரியரது அற்புதக் கற்பனைகள்

**(1) கதாநாயகியின் அரிய குணங்களும் சக்திகளும் :—**

மஹா பாரதக் கதையில், சித்திராவுக்கு இயற்கை யழகு ஒன்று இருந்ததைத் தவிர, குணவிசேஷங்கள் எதுவும் இருந்ததாகச் சொல்லப்படவில்லை. ஆனால் நாடகாசிரியர் அக் கதையை ஆராய்ந்து பார்த்து, உத்தமமான அரச வம்சத்தில் ஒரே புத்திரியாகப் பிறந்து, பெற்றோர்களால் ஒரு புத்திரனாகவே பாவிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயின் குணங்களும் சக்திகளும் செயல்களும் எப்படிப் பட்டவையா யிருக்கலா மென்று மனத்திற் சித்திரித்துக் கொண்டு, ஓர் அற்புத மான கதாநாயகியைச் சிருஷ்டித் திருக்கிறார்.

சித்திரவாகனன் தன் ஒரே புதல்வியைப் புத்திரன் போலவே வளர்த்தானென்றால், அவளுக்கு விற்பயிற்சியும், இன்னும் அரசகுமாரர்களுக்குரிய சகல கலைகளிலும் பயிற்சியும் அளித்திருக்கலாமல்லவா? சித்திரா, தனக் களித்த பயிற்சிகளால் சகல கலைகளையுங் கற்று, புத்திக் கூர்மையையும் சக்தியையும் வீரத்தையும் அடைந்தனள் என்று நாடகாசிரியர் கற்பனை செய்து காண்பித் திருக்கிறார்.

**(2) சித்திராவை மணமாகாத சுதந்திர அரசியாகக் காண்பித் திருப்பது :—**

மஹா பாரதக் கதையில் அருச்சுனன் மணிபுரத் துக்கு வந்தபோது, சித்திராவின் பிதா அரசராயிருந்தார். அவரே தனது புத்திரியான சித்திராங்கதையை அருச் சுனனுக்கு மணஞ் செய்து கொடுத்தார். ஆனால், இந்த நாடகத்தின் 8-ஆவது காட்சியில் சொல்லப்பட்டதி லிருந்து, அருச்சுனன் மணிபுரத்துக்கு வந்தபோது சித்திரா நாட்டுக்கு அரசியாக இருந்தாளென்று தெரிகிறது.

அவள் அருச்சுனனை முதலில் பார்த்த பின், ஸ்தல யாத்திரை போவதாகச் சொல்லி விட்டுக் காட்டில் தவஞ் செய்து கொண்டிருந்தா ளென்பது நாடகத்தின் முதற் காட்சி. கதையை நாடகாசிரியர் இவ்வாறு மாற்றினதால், சித்திரா வீரத்தாலும், செங்கோலரசாட்சியாலும் ஏற்கெனவே கீர்த்தி பெற்றவளென்று காண்பிக்க இடமுண்டாயிற்று.

தவிரவும், அவளது பிதா காலமாகி விட்டபடியால், மணஞ்செய்துகொள்வது அவளது இஷ்டமாக ஆய்விட்டது. வீரச் செயல்களிலும், அரசாங்கக் காரியங்களிலும் பூரணமாய் ஈடுபட்டிருந்த அவளது மனது தன் மணத்தைப்பற்றி நினைக்கவேயில்லை. மஹா வீரனான அருச்சுனன் தேச யாத்திரை செய்யும்போது மணிபுரத்துக்கு வந்ததும், அவனைச் சித்திரா காட்டிற்காண நேர்ந்ததும், அவள் அவனிடத்தில் காதல் கொண்டதும் இந்நாடகத்தின் சம்பவங்கள்.

(3) சித்திரா அழகுவரம் பெற்ற விசித்திரக் கதை :—

சித்திராவுக்குக் குணங்களும் சக்திகளும் அமிதமாக இருந்தும், அழகில்லை யென்ற ஒரு குறைவை நாடகாசிரியர் கற்பனை செய்திருக்கிருர். அக்குறைவு இருந்ததால், அருச்சுனனது மனத்தை அவளால் கவர முடியவில்லை அக்குறைவை நீக்கிக் கொள்வதற்காக, அவள் அழகுவரத்தை வேண்டித் தவங் கிடந்தாளென்பதும், ஓராண்டு காலத்துக்கு நிற்கும்படியான திவ்வியமான அழகைப் பெற்ருளென்பதும், அந்த ஆண்டு ஆனதும் அவளது அழகு அவளை விட்டு நீங்கி விட்டதென்பதும், இந்நாடகத்தின் விசித்திரமான கதை.

(4) அழகு வரந்தைப்பற்றிய கதையின் உள்ளர்த்தம்:—

அழகுவரக் கதை ஓர் உள்ளர்த்தத்தை உடையது. இக்கதை இயற்கைச் சம்பவங்களின் உருவகம். இது

ஸ்திரீ ஜன்மத்தின் முப்பருவங்களைச் சுருக்கமாகச் சித்திரித்துக் காண்பிக்கிறது. இந்நாடகத்தில் காட்டப் படும் வெளிக் காட்சியைப் பார்க்கும்போது, இந்த உள்ளர்த்தத்தையும் கிரகித்துக் கொண்டோமானால், நாம் இந்நாடகத்தை ருசித்து அனுபவிக்கலாம். இயற்கை யாக ஒவ்வொரு ஸதிரீக்கும் யௌவன பருவத்தில் ஆடவர் மனத்தைக் கவரும்படியான அழகு உண்டாகிற தென்பதும், அவ்வழகினால் அவள் ஒரு கணவரைப் பெற்றுக் கூடிவாழும்போது அவருடைய நிலையான மெய்க் காதலை அடைய இடம் உண்டாகிறதென்பதும், அழகை விட குணமே நிலையான இன்பத்தை யளிக்குமென்பதும், இந்நாடகத்தின் உள்ளர்த்தம்.

(5) வஸந்தனும் மன்மதனும் :—

இந்நாடகத்தில் தோன்றுகின்ற இரு தேவதைகளும் இயற்கைச் சக்திகளின் அதிபதிகள். அவர்கள் உலகத் தைப் பாதுகாக்கும் இரட்சகர்களாகக் காண்பிக்கப் பட்டிருக்கிறார்கள். மன்மதனது சக்தியால் ஸ்திரீ புருஷர் களிடத்திற் காதல் உண்டாகாவிட்டால், பிரபஞ்சமேது? வஸந்தனது சக்தி, கெட்டுப் போனவைகளைச் சீர்படுத்திக் களைத்தவர்களுக்குப் புத்துயிர் உண்டாக்காவிட்டால், உலகம் அழிந்துபோகாமல் நின்று விளங்குமா?

(6) காட்டில் வசித்த இன்ப ஆண்டு :—

அருச்சுனனுக்கு விதிக்கப்பட்ட வனவாச காலம் முடியாததால், அவன் ஊருக்கு உடனே போகமுடிய வில்லை. சித்திராவுக்குத் தன்னை இன்னாரென்று தெரி வித்துக் கொள்ளாமலே தனது சுயசக்தியால் தன் கணவரது மெய்க்காதலை அடையவேண்டுமென்பது நோக்கமானதால், ஓராண்டு காலத்துக்குக் காட்டிலேயே இன்பமாய்க் காலங்கழிக்கவேண்டுமென்பது, சித்தி ராவின் ஏற்பாடு.